Registered as a News Paper
பக்கங்கள் 06
விலை: ரூபா 6-00

நல்லூர் ...
யாழ்ப்பாணம்

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நாதம் 04 | திருவள்ளுவர் ஆண்டு 2024 | சித்திரை 24 | [07-05-93] | வெள்ளிக்கிழமை | ஓசை 78


## போருக்கு தலாவீதசெலவு மாதாந்தம் 1,877 ரூபா

வடக்கு-கிழக்கு யுத்தத்துக்கென 1992 ஆம் ஆண்டுக்காலப் பகுதியில் இலங்கையில் ஒவ்வொரு குடும்பமும் சராசரி 22,524 ரூபாவை யுத்தச் செலவினத்திற்குப் பங்களிப்புச் செய்துள்ளது என்று சண்டே ரைம்ஸ் பத்திரிகையில் ஆய்வுக் கட்டுரை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தக் கணிப்பீட்டின்படி, மாதம் ஒன்றுக்குத் தலா ஒவ்வொரு குடும்பமும் 1,877 ரூபாவை யுத்தச்செலவுக்குப் பங்களிப்புச் செய்துள்ளது.

### மீட்புநிதி சேகரிப்பு

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை அன்று நல்லூர் மங்கையர்க்கரசி மகா வித்தியாலயத்தில் காலை 9-00 மணி தொடக்கம் 10 00 மணிவரையும் மீட்புநிதி சேகரிக்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதுவரை காலமும் மீட்புநிதுக் கடனைச் செலுத்தத் தவறியோர் இக் குறித்த நாளில் தமது மீட்புநிதிக் கடனைச் செலுத்த முடியும் என தமிழீழ மீட்புநிதிப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

# கொழும்பு நகரில் ஊரடங்குச் சட்டம்; கலவரம் ஏற்படாது தடுக்க முயற்சி



ஜனாதிபதி செயலகத்தில் பிரேமதாசாவின் உடல் மக்கள் அஞ்சலிக்கு வைக்கப்பட்ட போது பிடிக்கப்பட்ட படம்.

## பாதுகாப்பு படைகள் உசார் நிலையில்

(கொழும்பு)

**கொழும்பு நகரில் அதிகரித்துவந்த பதற்றத்தைத் தொடர்ந்து நேற்றிரவு ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டது. சிறிலங்கா ஜனாதிபதியின் இறுதிக்கிரியைகள் முடிவடைந்த பின்னர் தமிழருக்கு எதிரான வன்முறை மூழ்வதைத் தடுக்கும் பொருட்டே இவ் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.**

கடந்த சனிக்கிழமை சிறிலங்காஜனாதிபதி ஆர். பிரேமதாசா கொல்லப்பட்டதில் இருந்து கொழும்பில் பதற்ற நிலை அதிகரித்து வந்தமை தெரிந்ததே. இப்பதற்ற நிலை பிரேமதாசாவின் இறுதிக் கிரியைகள் நேற்று இடம்பெறுவதைத் தொடர்ந்து தமிழருக்கு எதிரான பெரும் கலவரமாக வெடிக்கும் சூழ்நிலை ஏற்பட்டு வந்ததாகவும் அஞ்சப்பட்டது

இதனைவெளிப்படுத்துமாப்போல் ஆங்காங்கு தமிழர்கள் சிங்களக் காடையர்களால் மிரட்டப்பட்டும் வந்தனர். இதனைத்தொடர்ந்துகொழும்பில் இருந்து பல்லாயிரக் கணக்கான தமிழர்கள் வெளியேறியும் இருந்தனர்.

இருப்பினும், தொடர்ந்தும் பதற்றம் அதிகரித்து வந்த நிலையிலும், சில சிங்கள இனவாதக் குழுக்கள் தமிழர்கள் மீது தாக்கலாம் என வெளிவந்த செய்திகளைத் தொடர்ந்தும் நேற்றிரவு ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இரவு 10-00 மணியளவில் இருந்து அதிகாலை 5-00 மணி வரை இவ் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. இவ் ஊரடங்குச் சட்டம் முதலில் இரவு எட்டு மணியளவில் இருந்து அதிகாலை 5மணி வரை என அறிவிக்கப்பட்ட போதும், பிரேமதாசாவின் இறுதிக் கிரியைகள் தாமதமாக முடிந்தமையால், ஊரடங்கு சட்டநேரம் 10-00 மணியாக மாற்றப்பட்டது.

## வெள்ளவத்தையிலிருந்து தமிழர்கள் வெளியேற்றம்

சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவின் இறுதிக் கிரியையை அடுத்து கொழும்பில் கலவரம் ஏற்படலாம் என்ற அச்சம் காரணமாக நேற்று வெள்ளவத்தைப் பகுதியில் இருந்து நூற்றுக்கணக்கான தமிழர் வெளியேறியதாக ஜேர்மன் வானொலி தெரிவித்தது.

இவர்கள் வடக்கு நோக்கிச் செல்வதாகவும் அவ்வானொலி அறிவித்தது. நேற்று முன்தினம் வாழைத் தோட்டம். குணசிங்கபுர பகுதிவிலிருந்து பெருமளவு தமிழர் வெளியேறி வவுனியா நோக்கி வந்தமை தெரிந்ததே.

## குழப்பம் விளைவிப்போரை கண்ட இடத்தில் சுட பதில் ஜனாதிபதி உத்தரவாம்

### மோதிலால் நேரு தகவல்

(கொழும்பு)

குழப்பம் விளைவிப்போரை கண்ட இடத்தில் சுட்டுத்தள்ளுமாறு பதில் ஜனாதிபதி விஜேதுங்க படைகளுக்கு உத்தரவிட்டுள்ளதாக மோதிலால் நேரு தெரிவித்தார். கொழும்பில் தமிழர்களின் பாதுகாப்பு குறித்து அவர் பதில் ஜனாதிபதியை சந்தித்துப் பேசினார்.

அப்போதே இனக்கலகத்தைத் தூண்டுவோரை கண்ட இடத்தில் சுட தாம் உத்தரவிட்டுள்ளதாக மோதிலால் நேருவிடம் உறுதியளித்ததாக தெரிவிக்கப்படுகிறது.

அகில இலங்கை தமிழ் காங்கிரஸிலிருந்து வெளியேறி ஐ. தே. க வில் இணைந்த

(6 ஆம் பக்கம் பார்க்க)

# இராணுவ மரியாதையுடன்

# பலோப்பளை அம்மன் ஆலயம் மீது



ஜனாதிபதி செயலகத்தில் பிரேமதாசாவின் உடல் மக்கள் அஞ்சலிக்கு வைக்கப்பட்ட போது பிடிக்கப்பட்ட படம்.

# இராணுவ மரியாதையுடன் பிரேமாவின் உடல் தகனம்

காலஞ்சென்ற ஜனாதிபதி பிரேமதாசாவின் இறுதி ஊர்வலம் ஜனாதிபதி மாளிகையிலிருந்து நேற்று நண்பகல் 12 30 மணியளவில் ஆரம்பமானது. மல்லிகைமலர்களால் அலங்கரிக்கப்பட்ட பூதவுடல் தாங்கிய பேழை அன்னாரது மகன் சஜீத், மருமகன் றோகான் உட்பட பல முக்கிய பிரமுகர்களால் எடுத்துவரப்பட்டது. பூதவுடல் தாங்கிய பேழை ஜனாதிபதி மாளிகைக்கு வெளியே எடுத்துவரப்பட்டபோது அவரது மனைவியான ஹேமா பிரேமதாசா மற்றும் திருமதி துலாஞ்சலி ஜெயக்கொடி உட்பட அங்கு சூழுமியிருந்த பலரும் கண்ணீர்விட்டு அழுதனர்.

சிறிலங்கா தேசியக்கொடியினால் போர்த்தப்பட்ட இந்தப் பேழைக்கு முன்பாக வெள்ளை மற்றும் ஊதாக் கலரில் உடையணிந்த பாடசாலைச் சிறார்கள் அணிவகுத்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இறுதிக்கிரியைகளில் வெளிநாட்டுத் தலைவர்கள்

சிறிலங்கா ஜனாதிபதியின் இறுதிச் சடங்குகள் நேற்று கொழும்பில் இடம்பெற்றபோது, இந்திய அரசின் சார்பில் உபஜனாதிபதி கே. ஆர். நாராயணனும், பங்களாதேஷ் பிரதமர் திருமதி பேகம் காஸிதாஸியா, பாகிஸ்தானின் இடைக்காலப்பிரதமர் மசாறி, நேபாளத்தின் சட்டமன்றத் தலைவர் உட்பட முப்பதுக்கும் அதிகமான வெளிநாட்டுத் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

## இந்திய உப ஜனாதிபதிக்கு கறுப்பு பூனை பாதுகாப்பு

(கொழும்பு)

காலஞ்சென்ற ஜனாதிபதி பிரேமதாசாவின் இறுதிச் சடங்குகளில் கலந்து கொள்ள வந்திருக்கும் இந்தியக் குடியரசின் துணைத் தலைவர் ஜே. ஆர். நாராயணனின் பாதுகாப்பிற்காக கறுப்பு பூனைப் படையைச் சேர்ந்த ஆறுபேர் கொழும்பு வந்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரேமதாசாவின் இறுதிச் சடங்குகளில் கலந்துகொள்ள வந்திருந்த வெளிநாட்டுப் பிரதிநிதிகள் அனைவருக்கும் சிறிலங்கா விசேட அதிரடிப் படையினரின் பாதுகாப்பு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை கொழும்பில் பாதுகாப்பின்மையைக் காரணம் காட்டி இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் இறுதிக் கிரியையில் கலந்துகொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## ஹேமா பிரேமதாசா குளிர்பானம் வழங்கினார்

(கொழும்பு)

பிரேமதாசாவிற்குதமதுஇறுதி அஞ்சலி செலுத்த நீண்ட வரிசையில் வந்த பொது மக்களுக்கு திருமதி ஹேமா பிரேமதாசா குளிர்பானம் வழங்கினார். இது பலருக்கு வியப்பைத் தந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

அஞ்சலி செலுத்த வந்த பிரமுகர்கள் பலரும் குளிர்பானம் வழங்கிக் கொண்டிருந்த ஹேமாவைத் தேடிச் சென்று தமது அனுதாபங்களை தெரிவித்துக் கொண்டனர்.

## வீரச்சாவு



2-ம் லெப். அருள்மதனி

04-05-1993 அன்று யாழ். மாவட்டத்தில் சுகவீனம் காரணமாக விடுதலைப் புலிகள் பெண் போராளி ஒருவர் வீரச்சாவு அடைந்தார். வீரச்சாவு அடைந்த 2-ம் லெப்டினன்ட் அருள்மதனி (தச்சினாமூர்த்தி ரத்தினேஸ்வரி, வடலியடைப்பு பண்டத்தரிப்பு) எனும் போராளிக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

தெரிந்ததே. இப்பதற்ற நிலை பிரேமதாசாவின் இறுதிக் கிரியைகள் நேற்று இடம்பெறுவதைத் தொடர்ந்து தமிழருக்கு எதிரான பெரும் கலவரமாக வெடிக்கும் சூழ்நிலை ஏற்பட்டு வந்ததாகவும் அஞ்சப்பட்டது.

பில் இருந்து பல்லாயிரக் கணக்கான தமிழர்கள் வெளியேறியும் இருந்தனர்.

இருப்பினும், தொடர்ந்தும் பதற்றம் அதிகரித்து வந்த நிலையிலும், சில சிங்கள இனவாதக் குழுக்கள் தமிழர்கள் மீது தாக்கலாம் என வெளி

வரை இவ் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. இவ் ஊரடங்குச் சட்டம் முதலில் இரவு எட்டு

யால், ஊரடங்கு சட்டநேரம் 10-00 மணியாக மாற்றப்பட்டது.

குழப்பம் விளைவிப்போரை

## வெள்ளவத்தையிலிருந்து தமிழர்கள் வெளியேற்றம்

சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவின் இறுதிக் கிரியையை அடுத்து கொழும்பில் கலவரம் ஏற்படலாம் என்ற அச்சம் காரணமாக நேற்று வெள்ளவத்தைப் பகுதியில் இருந்து நூற்றுக்கணக்கான தமிழர் வெளியேறியதாக ஜேர்மன் வானொலி தெரிவித்தது.

இவர்கள் வடக்கு நோக்கிச் செல்வதாகவும் அவ்வானொலி அறிவித்தது. நேற்று முன்தினம் வாழைத் தோட்டம். குணசிங்கபுர பகுதிவிலிருந்து பெருமளவு தமிழர் வெளியேறி வவுனியா நோக்கி வந்தமை தெரிந்ததே.

## கண்ட இடத்தில் சுட பதில் ஜனாதிபதி உத்தரவாம்

### மோதிலால் நேரு தகவல்

(கொழும்பு)

குழப்பம் விளைவிப்போரை கண்ட இடத்தில் சுட்டுத்தள்ளுமாறு பதில் ஜனாதிபதி விஜேதுங்க படைகளுக்கு உத்தரவிட்டுள்ளதாக மோதிலால் நேரு தெரிவித்தார். கொழும்பில் தமிழர்களின் பாதுகாப்பு குறித்து அவர் பதில் ஜனாதிபதியை சந்தித்துப் பேசினார்.

அப்போதே இலக்கலகத்தை தூண்டுவோரை கண்ட இடத்தில் சுட தாம் உத்தரவிட்டுள்ளதாக மோதிலால் நேருவிடம் உறுதியளித்ததாக தெரிவிக்கப்படுகிறது.

அகில இலங்கை தமிழ் காங்கிரஸிலிருந்து வெளியேறி ஐ.தே.க வில் இணைந்த

(6 ஆம் பக்கம் பார்க்க)

# புலோப்பளை அம்மன் ஆலயம் மீது புக்காரா விமானக் குண்டு வீச்சு

(தென்மராட்சி)

புலோப்பளை அறத்தி அம்மன் ஆலயம்மீதும் ஆலயத்தை அண்டிய குடியிருப்புக்கள் மீதும் சிறிலங்கா விமானப் படைக்குச் சொந்தமான புக்காரா குண்டு வீச்சு விமானங்கள் குண்டுத் தாக்குதல் நடாத்தியுள்ளன.

நேற்றுக் காலை 6.30 மணியளவில் மேற்படி பகுதி வான் பரப்பிலும், கிளிநொச்சிப் பகுதி மீதும் இரண்டு புக்காரா குண்டுவீச்சு விமானங்கள் பலதடவை வட்டமிட்டன. பின்னர் புலோப்பளை அறத்தி அம்மன் ஆலயம்மீது குண்டுத்தாக்குதலை நடாத்தின. இக்குண்டுத் தாக்குதலில் மேற்படி ஆலயத்தின் பெரும்பகுதி சேதமடைந்தது. இவ் ஆலயத்தின் தீர்த்தக் கேணியில் இரு குண்டுகள் வீழ்ந்துவெடித்தன. அத்துடன் ஆலயத்தின் அண்டிய பகுதிகள் மீதும் குண்டுவீச்சுத் தாக்குதல்கள் நடாத்தப்பட்டன. இதனால் பல தென்னை மரங்கள் முறிந்து வீழ்ந்தன. ஆலயத்துக்கு வந்திருந்த சுமார் இருபது பக்தர்களும் மயிரிழையில் உயிர்தப்பினர்.

விமானக் குண்டு வீழ்ந்து வெடித்த இடங்களில் பாரிய குழிகள் தோண்டப்பட்டிருந்தன. இக்குழிகளில் நீர் ஊற்றெடுத்திருப்பதையும் காணக் கூடியதாக இருந்தது. மேற்படி பகுதி மக்களும் வீதியால் சென்றுகொண்டிருந்த மக்களும் இக்குண்டுத் தாக்குதலால் பீதியடைந்தனர். (86)

# முல்லை. கரையோரத்தில் அகோர விமானத் தாக்கு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு பகுதியில் சிறிலங்கா விமானப்படைக்குச் சொந்தமானஇரண்டுபுக்காரா குண்டுவீச்சு விமானங்கள் கரையோரப் பகுதிகளை அண்டி குண்டுவீச்சுத் தாக்குதலை நடாத்தின.

நேற்று முன்தினம் காலை 10-45 மணியளவில் முல்லைத்தீவிலுள்ள செம்மலை கரையோரப் பகுதியை நோக்கியே புக்காரா விமானங்கள் குண்டுகளை வீசின.

இவ் இரண்டுவிமானங்களும் அடுத்தடுத்து கரையோரப் பகுதிகளில்மூன்று குண்டுகளை வீசிய போதிலும் ஏற்பட்ட சேத விபரங்கள் தெரிய வரவில்லை.

## கிளாலி – பூநகரி படகுச்சேவை

கிளாலி பூநகரி–படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என யாழ். மாவட்ட வருவாய்ப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

## வீதி விபத்தில் பெண் பலி

மானிப்பாய் சந்தைக்கு முன்பாக நேற்றுஇடம் பெற்றவிபத்தொன்றில் இளம்பெண் ஒருவர் பலியானார்.

பகல்12-15மணியளவில்இவர் பயணம் செய்துகொண்டிருந்த துவிச்சக்கர வண்டியுடன் லொறியொன்று மோதியதால் அவர்அவ்விடத்திலேயே கொல்லப்பட்டார்.

கொல்லப்பட்டவர் சிவஞானம் ஜெயராணி (வயது 18) எனத்தெரிய வருகிறது.

# மன்னார் மாவட்டத்தில் சுப்பர்சொனிக் தாக்குதல்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தின் இருவேறு பகுதிகளில் சிறிலங்கா விமானப்படையின் சுப்பசொனிக் விமானங்கள் நடாத்திய குண்டு வீச்சு தாக்குதல்களினால் 15 ற்கு மேற்பட்ட வீடுகள் சேதமடைந்தன.

நேற்று முன்தினம் காலை 8-20 மணியளவில் முள்ளிக்குளம் பகுதியை வட்டமிட்ட இரண்டு சுப்பசொனிக் குண்டு வீச்சு விமானங்கள் கரையோரப் பகுதிகளை நோக்கி நான்கு குண்டுகளை வீசின. இக்குண்டுகள் வீழ்ந்து வெடித்த போதிலும் ஏற்பட்ட சேதவிபரங்கள் தெரியவில்லை.

தொடர்ந்து மீண்டும் காலை 10-30 மணியளவில் பெரிய குஞ்சுக்குளம் பகுதியை நோக்கிவந்த இவ்விரு விமானங்களும் அப்பகுதி மக்கள் குடியிருப்புகளை மையமாகக் கொண்டு நான்கு குண்டுகளை வீசின. இதனால் அப்பகுதியில் நான்கு வீடுகள் பலத்த சேதமடைந்ததுடன் 12ற்கு மேற்பட்ட வீடுகள் சிறு சிறு சேதங்களுக்குள்ளாகின.

## வரி விளம்பரம்

**கசற் றேடியோக்களா! கடிகாரமா!!**

உங்கள் கடிகாரங்களையும் றேடியோக்களையும் உத்தர வாதத்துடன் திருத்திக் கொள்ள எம்மை நாடுங்கள்: டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ் 284, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். கிளை: கண்டி வீதி, சாவகச்சேரி. (சி-6541)

**கோழித்தீன் வெற்றுப் பக்கற்**

கோழித்தீன் வெற்றுப்பக்கற் தேவை. ''மில்க்வைற்'' (சி 6564)

**ஒத்து மாறல்**

பயிற்றப்பட்ட விஞ்ஞான ஆசிரியர் கிளிநொச்சியில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு ஒத்துமாற (Mutual Transfer) விருபபுகிறார். தொடர்பு:- 40/4 கோவில் வீதி, சுண்டுக்குளி. (4803)

**உடன் விற்பனைக்குண்டு**

கைலைன் பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் மொத்தமாகவும், சில்லறையாகவும் உடன் விற்பனைக்கு உண்டு. 'மல்லிகாபதி' சந்தை கிழக்கு ஒழுங்கை மானிப்பாய். (4819)

**தேவை**

கடைச்சல் பட்டடை (லேத்) வேலையில் நன்கு தேர்ச்சி பெற்ற தொழிலாளர் தேவை சனி, ஞாயிறு நாட்களில் காலை 9மணி, மாலை 5மணிக்கு நேரில் சமுகம் தரவும். தொடர்பு:- ஜொனி வாகன சுத்திகரிப்பு நிலையம், கல்வியங்காடு சட்டநாதர் கோவில் முன்பாக. (4828)

**சாத்திரம்**

எண்சோதிடம், கைரேகை ஜாதகம் என்பன தங்கள் வாழ்வில் ஏற்படுத்தப்போகும் பலாபலன்களை முன்கூட்டியே அறிவதற்கு நாடுங்கள் வேலணை சோதிடர் V.A. சிவராசா 152B அரசடி றோட் கந்தர்மடம் யாழ்ப்பாணம். (4830)

**வண்ணப்படம்**

கவியோகி சுத்தானந்த பாரதியார் பிறந்த நினைவு தினம் 11-5-93இல். இவர் வண்ணப்படம் பெற்றுக்கொள்ள ரூபா 5/- பெறுமதி முத்திரை அனுப்பவும். ''மில்க்வைற்'' (சி/6573)

வவுனியாவில்

---

வாடிக்கையாளருக்கு

## அறிவித்தல்

**ஜோ. எகட்டன் ஜெசித்தாராவின்**

உணவுப் பார்சல்கள் தாமதமின்றி உடனடியாகக் கிடைக்கும்

பகல் 11-30 மணிமுதல் 3-30மணி வரை எல்லா உணவு வகை ஓடர்களும் துரித கதியில் கவனிக்கப்படும்.

ஜோ. எகட்டனின் **ஜெசித்தாரா உணவகம்**

(சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை) சுண்டுக்குளி. (சி/6569)

---

## இரத்ததானமும்

வர்களும் கூட ஒருபோதும் அனுமதிக்கப்படுவதில்லை.

ஆகவே இரத்தம் வழங்க ஒருவர் தெரிவானால் அவர் அதற்கு வைத்திய முறைப்படி தகுதியானவர் என்பதே பொருள் எனவே இதையிட்டு அச்சம் கொள்ளத் தேவையில்லை.

இரத்த தானம் எங்களுக்கு என்ன பயனளிக்கிறது? மேற் சொன்னவாறே உயிர்கலங்களை உற்பத்திசெய்யும் என்புமச்சைகளை தூண்டுகிறது.

எங்களிடம் உறை நிலையில் அல்லது எங்களுக்கு ஏதாவது நோய்கள் இருந்தால் அவை கண்டுபிடிக்கப்படுகிறது.

எங்களினுடைய இரத்த வகை அறியப்படுகிறது.

அதை விடவும் வைத்திய சாலையின் சில சிகிச்சைப் பிரிவுகளின் முன்னுரிமை கிடைக்க ஏற்பாடுகள் உள்ளன. அவ்வாறே இரத்த தானம் செய்த எங்களுக்கோ அல்லது எங்கள் நெருங்கிய ஒருவருக்கோ அவசரமாய் இரத்தம் தேவைப்படும் போது இரத்த வங்கி எங்களுக்கு உடனடியாகவே கைகொடுத்து உதவ காத்திருக்கின்றது. இது ஆயுட்காலம் பூராவும் செல்லுபடியாகக் கூடிய ஒரு சட்டபூர்வமான உரிமையாகும்.

இது எல்லாவற்றையும் விடவும் எனது இரக்தத்தினால் இன்னொரு மனித ஜீவன் வாழ்ந்து கொண்டிருக்கின்றது என்ற ஆத்ம திருப்தி. ஆம் இவ்வளவு நன்மைகளையும் அளிக்கின்ற இரத்த வங்கியில் நாங்கள் ஒரு பைந் இரத்தத்தை வைப்பிலிட தயங்கி நிற்கிறோம்? அது பற்றி அறியாமையினால் எழுந்த அச்சமா? அல்லதேல் ''தானுண்டு தன்பாடுண்டு'' என்ற எமது வாழ்க்கை கோட்பாடா?

எது எப்படியிருப்பினும் இனிமேலும் நாங்கள் அவ்வாறு இருக்கக் கூடிய காலமாய் இனி வரும் காலம் இருக்கப்போவதில்லை. எந்தக் கணத்திலும், எந்த இடத்திலும் எந்தவொரு மனிதனும் காயப்படுவதற்கான போர்க்கால நிகழ்தகவு அதிகரித்துச் செல்கின்றது எங்கள் ஒவ்வொருவருக்கும் இரத்தம் தேவைப்படக் கூடும். எனவே எங்களுக்காக ஆயினும் நாங்கள் இப்போதே இரத்தத்தை இரத்த வங்கியில் வைப்பிலிட முன்வரவேண்டும்.

பேராசிரியர் சிவஞானசுந்தரம் (நந்தி) அவர்கள் அண்மையில் நடந்த கருத்தரங்கொன்றில் குறிப்பிட்டதைபபோல எமது சமூகம் இரத்தத்துடன் மிகப் பரிச்சயமானதொன்றே! 'இரத்த உருத்து, இரத்த பந்தம், இரத்தத்தின் இரத்தம், இரத்தத்தை குடிப்பேன், இரத்தக் கொதிப்பு என பல்வேறு வகையிலும் இரத்தத்தோடு உணர்வு ரீதியில் ஐக்கியப்பட்டிருக்கும் நாம் இரத்த தானம் செய்வதில் மட்டும் ஏன் தூர நிற்கின்றோம்? மேலும் பேராசிரியர் குறிப்பிட்டவாறே ''உனக்கு என்உயிரைத் தருவேன்?'' என்று சொல்வதிலும் ''உனக்கு நான் எனது இரத்தத்தைத் தந்துள்ளேன்'' என்பது யதார்த்தமான செயல் வடிவாகும்.

சாதாரணமாகவே மேற்கத்தைய நடைமுறைகளைப் பின்பற்றி வாழும் நாம் ஏன் இந்த இரத்ததான விடயத்தில் மட்டும் புறநடையாய் ஒதுங்கி தூரநிற்கிறோம்? ஏன் இன்று தென்னிலங்கையிற் கூட கண் தானத்தைப் போலவே இரத்த தானமும் உயர்ந்த சமூக நெறியாக, வாழ்க்கைப் பண்பாக மாறி அங்குள்ள வைத்திய சாலைகளின் இரத்த வங்கியை நிறைத்து வருவதை எங்கள் வைத்திய நிபுணர்கள் சுட்டிக்காட்டுவதை நாங்கள் கவனத்தில் எடுக்க வேண்டும்.

எவ்வாறு பௌத்தமத அமைப்புகள் கண் தானத்தையும், இரத்த தானத்தையும் ஊக்கப்படுத்தி, முனைப்பாக்கின்றனவோ அவ்வாறே எமது சமய, சமூக அமைப்புகள் இது விடயத்தில் கூடிய கவனமெடுக்க வேண்டிய காலம் இதைத் தவிர வேறில்லையென்றே கூறலாம்.

ஒரு மனிதனின் வயிற்றுப் பசியை போக்கும் அன்னதானத்தைப்போலவே ஒரு மனித உயிரை, அதன் வாழ்வைக் காப்பாற்றும் இரத்ததானமும் மிக மிக உயர்ந்த பணியேயாகும்.

---

## மொழிபெயர்ப்பாளர்கள் தேவை

ஆங்கில நூல்களைத் தமிழில் மொழி பெயர்க்க வல்லவர்கள் விண்ணப்பிக்கவும். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

விளம்பர இலக்கம்: 186
மே/பா. ஈழநாதம்
31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்.

(4826)

---

சன்மார்க்க சபை - குரும்பசிட்டி
''ஈழகேசரி'' நா. பொன்னையா

## 42ஆம் நினைவு தினம்

இடம்: கம்பன் கோட்டம், நல்லூர்
காலம்: 09-05 1993 ஞாயிறு காலை 9 00 மணி

தலைவர்: கலாகேசரி ஆ. தம்பித்துரை

நினைவுப்பேருரை
"ஈழகேசரியும் குழந்தை இலக்கியமும்"
திரு. எஸ். சிவலிங்கராசா எம். ஏ.
(சிரேஷ்டவிரிவுரையாளர், தமிழ்த்துறை யாழ் பல்கலைக்கழகம்

நூல் வெளியீடு:
இரசிகமணியின் சிறுவர் கவிநயம்
தலைமை: கலைப்பேரரசு ஏ.ரி பொன்னுத்துரை
வெளியீட்டுரை: கவிஞர் புதுவை இரத்தினதுரை
ஆய்வுரை: கவிஞர் கல்வயல் குமாரசாமி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

ச. பழனிவேல், சி. கௌரிபாலன்
இணைச் செயலாளர்கள்
(4824)

---

இதோ, பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்தரம், கர்ப்பத்தின் கனி அவரால் கிடைக்கும் பலன். சங் 127:4

---

தச்சுத் தொழிலாளர் சங்க

## பொதுக்கூட்டமும் நிர்வாகசபைத் தெரிவும்

மேற்படி சங்கத்தின் பொதுக் கூட்டமும், நிர்வாக சபைத் தெரிவும், எதிர்வரும் 09. 05. 93 ஞாயிறு காலை 10.00 மணிக்கு யாழ் இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. சகல தச்சுத் தொழிலாளர்களும் (அழைப்பிதழ் கிடைக்கத் தவறியவர்களும்) இந்நிகழ்ச்சியில் பங்கு பற்றிச் சிறப்பிக்குமாறு வேண்டுகிறோம்.

நன்றி

–நிர்வாகம்

யாழ் மாவட்ட
தச்சுத்தொழிலாளர் சங்கம்
16, பசார் லேன்,
யாழ்ப்பாணம்.

(4833)

---

வடபிராந்திய முச்சக்கர மோட்டார்

---

O/L,
**ஆண்டு 10**
வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
SHAMROCK
சுண்டுக்குளி, யாழ்.
(சி-6579)

---

BECON
(பாரதிதாசன் நிறுவனம்)
1993
O/L DAY CLASS
புதிய பிரிவுகள்
ஆரம்பம்:
08 - 05 - 1993
(சி-6580)

---

பிரத்தியேக
**நியூ சயன்ஸ் சென்ரர்**
எழிலகம் முன்லேன்
யாழ்.
95 A/L
Pure-App — 8 A. M,
திரு. குணசிங்கம் B.Sc(Hons)
CHE — 7 A. M.
திரு. செல்வா B.Sc(Hons)
PHY — 10 A. M.
திரு. ரவீந்திரநாதன்
B. Sc (Cey) Dip. InEd
BOT — 8 A. M.
திரு. பாலா
Zoo – Batch-I 9-00A.M.
Batch-II 12 30A.M.
R ஈஸ்வரதாசன்
B. Sc (Cey) Dip. InEd
(சி/6576)

---

## 6-ம் மாத நினைவஞ்சலி



தோற்றம்:
24 - 10 - 1925
மறைவு:
07 - 11 - 1992
திதி:
04 - 05 - 1993

அமரர்
**திருமதி ஈஸ்வரி-அம்மா ஏகாம்பரநாதன்**

எம்மை ஆறாத்துயரில் விட்டு இறைவனடி சேர்ந்த எமது குடும்ப விளக்கு அன்புத் தெய்வம் திருமதி ஈஸ்வரிஅம்மா ஏகாம்பரநாதனின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கும்

தும்பளை மேற்கு,
பருத்தித்துறை
(சி-6582)

அன்புக் கணவன், மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

---

## நினைவு கூருகின்றோம் ... 1993-05-07

1985 ஆம் ஆண்டு இதே தினத்தில் மட்டு. கரடியனாற்றுப் பகுதியில் சிறிலங்கா அதிரடிப் படையினருடனான சமரின் பின் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

முன்பாக. (4828)

## சாத்திரம்

எண்சோதிடம், கைரேகை ஜாதகம் என்பன தங்கள்வாழ் வில் ஏற்படுத்தப்போகும் பலா பலன்களை முன்கூட்டியே அறி வதற்கு நாடுங்கள் வேலணை சோதிடர் V.A. சிவராசா 152B அரசடி றோட் கந்தர்மடம் யாழ்ப்பாணம் (4830)

## வண்ணப்படம்

கவியோகி சுத்தானந்த பார தியார் பிறந்த நினைவு தினம் 11-5-93இல். இவர் வண்ணப்ப டம் பெற்றுக்கொள்ள ரூபா 5/- பெறுமதி முத்திரை அனுப்ப வும் ''மில்க்வைற்'' (சி/6573)

## வவுனியாவில் வழமை நிலை

(வவுனியா)

ஜனாதிபதி பிரேமதாசா வின் கொலையை அடுத்து ஸ்தம்பிதமடைந்திருந்த போக்கு வரத்துகள் வழமை நிலையை அடைந்துள்ளன.

கடந்த 3ஆம் திகதிகொழும் பிலிருந்து புறப்பட்டு வந்த பயணிகள் வவுனியா ஊடாக வடபகுதி வந்து சேர்ந்தனர்.

தற்போது வடபகுதியி ருந்து கொழும்பிற்கான போக்கு வரத்து வழமை போலவே நடைபெறுகிறது.

வவுனியா நகரில் வழமை நிலை நிலவுகிறது. (தி)

## புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

**A/L 95**

புதிய பிரிவு

ஆரம்பம்:
8. 5. 93

0 பொருளியல்: மகேந்திரன்
0 கணக்கியல்: SAM
0 வர்த்தகம் தேவா குகன்
0 அளவையியல்: சோதிலிங்கம்
0 புவியியல்: சண்
0 அரசியல்: கியூபேட்
0 வரலாறு: நாகராணி
0 தமிழ்: குழந்தை
0 இந்து நாகரீகம் )
0 இந்து சமயம் )
: அருள் நங்கை
0 கிறீஸ்தவம் அருட்சகோதரர்

அனுமதிகள் வழங்கடபடுகின்றது
[சி/6566]

---

தலைவர்: கலாகேசரி ஆ. தம்பித்துரை

நினைவுப்பேருரை

**"ஈழகேசரியும் குழந்தை இலக்கியமும்"**

திரு. எஸ். சிவலிங்கராசா எம். ஏ.
(சிரேஷ்டவிரிவுரையாளர், தமிழ்த்துறை யாழ் பல்கலைக்கழகம்

நூல் வெளியீடு:

**இரசிகமணியின் சிறுவர் கவிநயம்**

தலைமை: கலைப்பேரரசு ஏ.ரி பொன்னுத்துரை
வெளியீட்டுரை: கவிஞர் புதுவை இரத்தினதுரை
ஆய்வுரை: கவிஞர் கல்வயல் குமாரசாமி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

ச. பழனிவேல், சி. கௌரிபாலன்
இணைச் செயலாளர்கள்
(4824)

---

இதோ, பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்தரம், கர்ப்பத்தின் கனி அவரால் கிடைக்கும் பலன். சங் 127:4

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



## செல்வி சி. கிளமெற்ற

(ரொபேக்கா)

ஊரெழு மேற்கைச் சேர்ந்த சிவாபாலன் யோகேஸ்வரி தம்பதிகளின் புதல்வி கிளமெற்ற தனது முதலாவது பிறந்த நாளை இன்று 07 5-93இல் வெகு விமரிசையாக கொண்டாடுகிறார்.

இவரை அப்பா, அம்மா, அப்பம்மா, அத்தை, கனடா சித்தப்பா, சவுதி மாமா, அபூகவி மாமா அம்மம்மா, அப்பப்பா, மாமாமார், மாமிமார், பெரியப்பா, பெரியம்மா, உற்றார், உறவினர்கள், நண்பர்கள், கர்த்தருடைய கிருபையுடன் வாழ்த்துகிறார்கள்.

(சி-6554)

---

றில் குறிப்பிட்டதைப்போல கும்.

தச்சுத் தொழிலாளர் சங்க

## பொதுக்கூட்டமும் நிர்வாகசபைத் தெரிவும்

மேற்படி சங்கத்தின் பொதுக் கூட்டமும், நிர்வாக சபைத் தெரிவும், எதிர்வரும் 09.05.93 ஞாயிறு காலை 10.00 மணிக்கு யாழ் இந்துக் கல்லூரி குமார சுவாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. சகல தச்சுத் தொழிலாளர்களும் (அழைப்பிதழ் கிடைக்கத் தவறியவர்களும்) இந்நிகழ்ச்சியில் பங்கு பற்றிச் சிறப்பிக்குமாறு வேண்டுகிறோம்.

நன்றி

—நிர்வாகம்

யாழ் மாவட்ட
தச்சுத்தொழிலாளர் சங்கம்
16, பசார் லேன்,
யாழ்ப்பாணம்.

(4833)

---

வடபிராந்திய முச்சக்கர மோட்டார் வண்டி சேவைச் சங்கம்

## வருடாந்தப் பொதுச் சபைக் கூட்டமும் புதிய நிர்வாகிகள் தெரிவும்

மேற்படி கூட்டம் 9-5-93 ஞாயிற்றுக்கிழமை காலை 9-30 மணிக்கு முத்திரைச்சந்தை ஸ்தான பாடசாலை மண்டபத்தில் நடைபெற இருப்பதால் சகல முச்சக்கர மோட்டார் வண்டி உரிமையாளர்களும் தவறாது கலந்து கொள்ளவும்.

நன்றி

(4832) — நிர்வாகம்

---

உடுப்பிட்டி சந்தி வல்லைவெளிப் பிள்ளையார்ஆலய
6 ஆம் திருவிழா சிறப்பு நிகழ்ச்சியாக
இன்று (07 – 05 - 93)
திருநெல்வேலி

## அபர்ணாலயா

இசைக்குழுவின்

## ராக சங்கமம்

(4831)

---

## 4-வதுபிறந்தநாள்வாழ்த்து

## செல்வி அ. சிந்துஜா

07.05-93

பருத்தித்துறை நாகலிங்க முதலி வீதியைச் சேர்ந்த திரு. திருமதி அரசரட்ணம் (தயா) இராஜேஸ்வரி தம்பதிகளின் புதல்வி சிந்துஜா, தனது 4 ஆவது பிறந்ததினத்தை இன்று வீட்டில் கொண்டாடுகின்றார்.

இவர், நீடூழி வாழ, அப்பா அம்மா, அண்ணா ஆகியோருடன் உற்றார், உறவினர்கள் யாவரும் வாழ்த்துகின்றார்கள். (சி-6574)

---

## ஏகாம்பரநாதன்

எம்மை ஆறாத்துயரில் விட்டு இறைவனடி சேர்ந்த
எமது குடும்ப விளக்கு அன்புத் தெய்வம்
திருமதி ஈஸ்வரிஅம்மா ஏகாம்பரநாதனின்
ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கும்

அன்புக் கணவன், மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

தும்பளை மேற்கு,
பருத்தித்துறை
(சி-6582)

---

## நினைவு கூருகின்றோம் ...
## 1993-05-07

1985 ஆம் ஆண்டு இதே தினத்தில் மட்டு. கரடியனாற்றுப் பகுதியில் சிறிலங்கா அதிரடிப் படையினருடனான சமரின் பின் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**பட்டாபி** [செல்வராசா ரூபாகரன் - மகிழடித்தீவு, கொக்கட்டிச்சோலை - மட்டு.]

1987ஆம் ஆண்டு யாழ். பருத்தித்துறையில் வெடிகுண்டு ஆய்வின்போது எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வெடி விபத்தில் எமைப் பிரிந்த -

**அல்வின்** [அமிர்தலிங்கம் சற்குணராசா - யாவத்தை, வதிரி, அல்வாய் தெற்கு, கரவெட்டி - யாழ்.]

1991 ஆம் ஆண்டு மட்டு - சித்தாண்டிப் பகுதியில் பேருந்தில் பயணம் செய்து கொண்டிருந்தவர்கள் மீது சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட 2 தமிழர்கள்.

1992 ஆம் ஆண்டு மட்டு - இங்கிரிமடுவெட்டையில் எமது முகாமொன்றைச் சிறிலங்கா இராணுவம் சுற்றி வளைக்க முயன்ற நடவடிக்கையில் ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய -

**மேஜர் சித்தா** [கந்தையா விசுவலிங்கம் - சந்தைவீதி. கிரான் - மட்டு.]

**கப்டன் மயிலவன்/மாட்டின்** [குமாரவேல் கணேசராசா - வடமுனை, ஊத்துச்சேனை, வெலிகந்த மட்டு.]

**2-ம் லெப். விக்கினா** [சிவலிங்கம் புவனேந்திர ராசா - ஆறுமுகத்தான் குடியிருப்பு, ஏறாவூர் - மட்டு]

**2-ம் லெப். மோகன்/கேதாரராஜா** [சுப்பிரமணியம் விஜயகுமார் - சந்தை வீதி, கிரான்-மட்டு]

**இறைகுமார்/சுந்தர்** [சாமித்தம்பி சந்திரசேகரம் - மண்டூர் - மட்டு.]

**மகிந்தன்/மகிந்தகுமார்** [பொன்னையா ராஜன் - களுவாங்கேணி, வந்தாறுமூலை – மட்டு.]

**சுந்தரலிங்கம்/கிரிசாந்தன்** [கிருஷ்ணபிள்ளை இதயகுமார் - மன்னம்பிட்டி - மட்டு.]

**சந்திரகுமார்** [விநாயகமூர்த்தி யோகராசா - காளி கோயில் வீதி, கிரான் - மட்டு.]

இச்சம்பவத்தின் பின் கதிரவெளியில் இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்ட திருமலை - மூதூர் வெருகலைச் சேர்ந்த தமிழ் இளைஞன், மட்டு - கதிரவெளியைச் சேர்ந்த 2 தமிழ்ப் பொதுமகன்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

## தமிழீழ விடுதலைப் புலிகள்

(சி/6572)

# இந்த மனிதர் எந்த யுகத்தில் வாழ்கிறார்? தணிகாசலத்தாரின் தப்புத் தாளங்கள்

சீதன வழமை பற்றி திரு. தணிகாசலம் எழுதிய கட்டுரையை வாசித்தபொழுது, இந்த மனிதர் எந்த யுகத்தில், எந்த சமுதாயத்தில் வாழ்ந்துகொண்டிருக்கிறார் என்ற சந்தேகமே எனக்கு முதலில் எழுந்தது. சீதனம்பற்றி அவர் தரும் வியாக்கியானமும், யாழ்ப்பாண சமூகவாழ்வில் சீதன வழக்குமுறைபற்றி அவர் தெரிவிக்கும் கருத்துகளும் இன்றைய நடப்பியல் எதார்த்தத்திற்கு முற்றிலும் முரணாக இருப்பதால் இவர் எந்த உலகத்திலிருந்து இதையெல்லாம் கற்பனை செய்திருக்கிறார் என்ற ஐயப்பாடு எழுகிறது.

யாழ்ப்பாணச் சமூகத்தை விளங்கிக்கொள்ள விழைபவர்களும், பழைய சாதிய சமூக உறவுகளை கிளறிப்பார்க்க எத்தனிப்பவர்களும், தேச வழமைச் சட்டத்தொகுப்பிலிருந்தே சமூகவியல் சான்றுகளை பெற்றுக்கெள்கிறார்கள். இந்த வழிமுறையில் தணிகாசலம் அவர்களும் தேச வழமை சட்டத்தொகுப்பிலிருந்து சீதன வழக்கிற்கு ஒரு வரைவிலக்கணத்தைக் கொடுக்க முயற்சிக்கிறார். திருமணத்தின் போது மணப்பெண்ணிற்கு பெற்றோர் உவந்தளிக்கும் சொத்துடமையை சீதனமென விளக்கும் திரு. தணிகாசலம் தாய்வழிச் சொத்து சீதனமாக மணப்பெண்ணுக்கே உரித்தாகிறது என்கிறார். இது அந்தக் காலத்தில் போர்த்துக்கீசருக்கு முந்திய காலத்தில் அந்தணராசாக்களும், முதலிகளும் அடிமை குடிமைகளை ஆண்டுவந்த யாழ்ப்பாண இராச்சியத்தில் நடைமுறை வழக்காக இருந்திருக்கலாம். திரு. தணிகாசலம் கூறுவதுபோல, உயர் குலத்து சொத்துடமையாளரின் சொத்துப்பரிமாற்று வழக்கு சீதனமாக உருப்பெற்று தாம்பத்திய உறவை நிர்ணயிருக்கும் சம்பிரதாயமாக வளர்ந்திருக்கலாம். ஆனால், அன்றைய வழக்கு இன்று நடைமுறையில் வேறுபட்டதாக இருக்கிறது.

இன்றைய நடப்பியல் எதார்த்தத்தை எடுத்துக் கொண்டால், மணப்பெண்ணிற்கு பெற்றோர் உவந்தளிக்கும் சொத்துடமை என்ற ரீதியில் சீதனத்தை சித்திரித்துவிடமுடியாது. அன்றி தாய்வழிச்சொத்து மணப்பெண்ணிற்கு பரிமாற்றம் செய்யப்படும் வழக்காகவும் கொள்ளமுடியாது.

சீதனமாக பரிமாறப்படும் சொத்துக்கள் மணமகளுக்கு மட்டுமன்றி, மணமகனுக்கும் மணமகனின் குடும்பத்தினருக்குமாக பல்வேறு வடிவங்களில் பகிர்ந்தளிக்கப்படுகிறது. வீடு, காணி, நிலம் என்ற ரீதியில் மணமகனுக்கும் சொத்துரிமை சேர்த்து எழுதப்படுவதுடன் மணமகனுக்கு பிரத்தியேகமாக ரொக்கப்பணமும் மணமகனின் குடும்பத்தாருக்கு ''அன்பளிப்பாக'' ஒரு பெரிய தொகையும் வழங்கப்படும் முறைமை இன்று யாழ்ப்பாணத்தில் பரவலாக கடைப்பிடிக்கப்படுகிறது. சாதி, குலம், சமூக அந்தஸ்து மாப்பிள்ளையின் பட்டம், படிப்பு, உத்தியோகம் என்ற வகையில் சீதனப் பொருளுடமையின் ஏற்றங்கள் இறக்கங்கள் கணிக்கப்படுகின்றன. இதோடு மாத்திரமின்றி விமானச்சீட்டாகவும் சிங்கப்பூர் தங்கமாகவும் அமெரிக்க டொலராகவும் சீதனச்சொத்து உருமாற்றம் பெற்று வெளிநாடுகளுக்கும் பயணம் மேற்கொள்கிறது. இவ்வாறாக இன்று நடைமுறையில் விஸ்வரூபப் பரிமாணம் பெற்றிருக்கும் இந்தச் சீதன விவகாரம் பற்றி தணிகாசலம் அவர்கள் அறிந்திராதது ஆச்சரியப்படவேண்டியதொன்று. ஆரிய சக்கரவர்த்திகள் காலத்து பழமையில் புதைந்து போய்க்கிடக்கும் அவர் தாய்வழிச் சீதன முறைமைதான் இன்றும் யாழ்ப்பாணத்தில் தொடர்ந்து வருவதாக கற்பிதம்

பிரச்சினை அல்ல என்பதும் அவரது தனிப்பட்ட கண்டுபிடிப்பு. இதிலிருந்து ஒன்று தெட்டத்தெளிவாகிறது. அதாவது, யாழ்ப்பாண சமூக வாழ்வின் கொடூரமான நடப்பியல் உண்மைகளிலிருந்து திரு. தணிகாசலம் அந்நியமாகி நிற்கிறார் என்பதுதான். சீதனக் கொடுமையால் இரத்தக் கண்ணீர் வடித்து நிற்கும் பெண்ணினத்தின் அவல நிலையை அவர் எந்த அளவிற்கும் புரிந்துகொண்டதாக தெரியவில்லை.

சீதன முறை பெண்களின் வாழ்க்கையை நிர்ணயித்துவிடும் ஒரு சமூகக் கொடுமை என்பதால், அது பெண்ணினம் எதிர்கொள்ளும் ஒரு பிரத்தியேக பிரச்சினை என்பதை எவரும் மறுக்கமுடியாது.

பொருளுடமை இல்லை என்றால் திருமண வாழ்வு இல்லை என்ற அளவுக்கு சீதனம் பெண்ணின் தாம்பத்திய உறவை நிச்சயித்துவிடும் அளவுக்கு ஒரு சமூக சாபக்கேடாக வளர்ந்துள்ளது. இன்னொரு விதத்தில் சொல்லப்போனால், ஆண் - பெண் உறவையும் குடும்பவாழ்வையும் நிர்ணயிக்கும் அளவிற்கு பொருளுடமை எமது சமூக வாழ்வை ஆட்டிப்படைக்கிறது. இதற்கு அடிப்படைக் காரணம் ஆணினத்தின் பொருள் மோகம் அன்றி வேறொன்றுமல்ல. யாழ்ப்பாணத்து மனிதன் பெண்ணைவிட பொருளையே காதலிக்கிறான். பணத்தையே திருமணம் செய்துகொள்கிறான். பணத்திற்கு ஏங்கும் ஆணும், வாழ்வுக்கு ஏங்கும் பெண்ணுமாக இன்று எமது சமூக உறவுகள் மிகவும் சீரழிந்த நிலையில் இருக்கிறது. இதில் பாதிப்படைவது பெண்களே. பொருளுடமை இல்லாததால் சீதனத்திற்கு வக்கின்றி, தாம்பத்திய வாழ்வில் பிரவேசிக்க முடியாது விரக்தியடைந்து வாழும் எண்ணற்ற பெண்களின் சோகக் கதைகள் ஏராளம். பெண்ணுலகில் பரந்துகிடக்கும் இந்த அவலத்தை எழுத்தில் விபரிக்கத் தேவையில்லை. இது சகலரும் அறிந்த உண்மை

சீதன முறைமை தாம்பத்திய வாழ்வையும் ஆண்-பெண் உறவையும் இழிமைப்படுத்துகிறது. பெண்ணின் தனிதமனித கௌரவத்தை அசிங்கப்படுத்துகிறது. ஒரு பெண்ணின் தகைமை அவளது பண்பால், அறிவால், ஆளுமையால் நிச்சயிக்கப்படாமல் பொருளுடமையால் நிர்ணயிக்கப்படுகிறது. மனிதப் பண்புகளுக்கு மேலாக பணவுடமை ஒரு பெண்ணிற்கு விலையைக் குறிக்கிறது. சீதனச் சந்தையில், திருமணவியாபாரத்தில் பெண்மை மிகவும் கேவலமாக இழிவுபடுத்தப்படுகிறது. இதற்கு காரணகர்த்தாக்கள் ஆண்கள்.

திரு தணிகாசலம் அவர்கள் சீதனப் பிரச்சினையை அதன் ஆழத்தில் இன்றைய நிதர்சனத்தில் பார்க்கவில்லை. ஆண்களின் அதர்மமான பொருளாசையைக் கண்டிக்காமல் பெண்களின் அவலநிலைக்கு பெண்கள் மீதே பழியைச் சுமத்த முனையும் அவரது வாதம் அசட்டுத்தனமானது. பெண்பிள்ளைகளுக்கு வரன் தேடுவதிலும், அவர்களைக் ''கரைசேர்ப்பதிலும்'' பெற்றோர் எதிர் கொள்ளும் துன்ப துயரங்களை நாம் மறுப்பதற்கில்லை. ஆனால் இதற்கு காரணகர்த்தாக்கள் பெண்களில்லை. பொருளாசை படைத்த ஆணாதிக்கத்தின் அசிங்கமான வெளிப்பாடாக தோற்றம் கொண்டுள்ள ஒரு சமூகப் பிரச்சினைக்கு பெண்களைக் குற்றம் கூற முடியாது.

சீதனப் பிரச்சினையை இல்லாதொழிப்பதற்கு காதல் திருமணங்கள் ஊக்குவிக்கப் படவேண்டும் என்ற ஓர் ஆக்கபூர்வமான கருத்தை தணிகாசலத்தார் முன்வைக்கிறார். இது ஒரு நல்ல யோசனைதான். இதனை அவர் தனது குடும்பத்தில் ஊக்குவித்திருந்தால் வாழ்க்கை பூராகவும் உழன்று கஷ்டப்பட்டிருக்கதேவையில்லை. பெண்பிள்ளைகளை வேலிச்சிறைக்குள்ளும் சமையல் அறைக்குள்ளும் பூட்டிவைத்திராது வெளியுலகில் சுதந்திரப் பறவைகளாக நடமாடவிட்டிருந்தால் தணிகாசலத்தார் போன்ற பழமை வாதிகளுக்கு வாழ்க்கைச் சுமை குறைந்திருக்கலாம்.

**சாணக்கியன்**

# சீதனம்

## ஒரு விவாத மேடை

# சீதனம்: பெண்கள் பயனடைவதில்லை ஆண்களும் பாதிக்கப்படுவதில்லை சீரழிவது சமூகம்தான்

**30-04-93** இல் உதித்த வெள்ளி மஞ்சரியில் ''சீதனம்: பயனடைவது பெண்கள்; பாதிக்கப்படுவது ஆண்கள்'' என்ற தலைப்பிலான விவாதமேடை சிந்திக்க வைப்பதாக இருந்தது. ஒருவன், ஒருத்தி அவர்களது குழந்தைகள் என்ற ஒரு குடும்பத்தினது அனுபவங்களையும், இயலாமைகளையும் வைத்துக் கொண்டு ஒரு பெரிய பிரச்சினையை இனம்காட்ட முயல்வதுகூட பெரிய தவறென்றே கருதுகிறேன். அந்த விவாதமேடையை அமைத்திருந்த பெரியவர் க. தணிகாசலம் அவர்களின் கருத்துகள் பல என்னோடு மாறுபடுவதனை உணரக்கூடியதாக இருந்தது. அந்த விவாதமேடையைப் போன்றே என் கருத்துகளிற்கும் களம் அமைத்துத்தந்தால் பெண்கள் சார்பில் ஈழநாதத்திற்கு பெரிதும் நன்றியுடையவளாக இருப்பேன்.

முதலில் தன் சொந்த வாழ்வினை மையமாகக் கொண்டே எழுதப்பட்டு அமைந்த அந்த கட்டுரையை தன் பரந்த அனுபவத்திலிருந்து எழுதுவதாக கட்டுரையாளர் குறிப்பிட்டுள்ளார். அத்தோடு ''பெண்நிலை வாதிகள்'' கட்டாயமாக தனது கருத்துக்களை புறக்கணிப்பார்கள் என்றும் குறிப்பிட்டார். இந்த ஒரு சந்தர்ப்பமே தங்கள் உரிமைகளை வென்றெடுக்க விழித்

கடன் பட்டெல்லாம் இவர் தன் மற்றைய பெண்களிற்காக சீதனம் சம்பாதித்ததாகவும், தற்போது தான் ஓய்வுபெற்ற கடனாளியாகவும் இருப்பதாக தணிகாசலம் ஐயா அவர்கள் எழுதியிருந்தார். ஆசிரியரான இவரே சீதனத்தை வலியுறுத்தும் முகமாக தன்மகள்களுக்கு முனைந்து உழைத்திருக்கிறார். என்பது உண்மைதான்.

ஆனால், அவர் அவ்வாறு உழைக்காமல் சீதனம் சம்பாதித்திருக்காமல் இருந்திருந்தால் நிச்சயமாக அவருடைய மகள்மாரிற்கு திருமணம் நடந்திருக்கப் போவதில்லை. அப்படி இருக்கும் பட்சத்தில் தாம்பத்திய வாழ்வு அப்பெண்களிற்கு இல்லாமல் அதாவது எட்டாமல் போகிறது. இதனால் பாதிக்கப்படுவது யார்? அந்தப் பெண்கள் தானே! இதைப் போல சீதனமின்மையால் தாம்பத்தியம் எட்டாமல் போன ஆண்கள் யாராவது இருக்கிறார்களா? இவ்வாறிருக்க ''சீதனப்பிரச்சினை என்பது ஆணுலகம் எதிர்கொள்ளும் ஒரு சமூகப்பிரச்சினை. இது பெண்கள் பிரச்சினை அல்ல'' என்பது மிகவும் பொருளற்றுப் போகிறது. ஆனாலும் தங்கள் சிக்கனத்தாலும், வேறு விதமாகவும் தன் பெண்களிற்கு தாயார் கூட சீதனம் தேடுகிறார் என்பதை கட்டுரையாளர் ஏனோ மறந்துவிட்

நலன்களையே அது நிலைநாட்டுகிறது'' என்ற கருத்தை கண்மூடித்தனமானது என்று குறிப்பிட நான் தயங்கவே மாட்டேன்.

சீதனம் பெண்களிற்கு சுயசார்பான ஒரு பொருளாதார அடித்தளத்தை உருவாக்கிக் கொடுப்பதாக எழுதியிருந்தார். சீதனமில்லாத பெண்கள் சுயசார்பான பொருளாதார அடித்தளம் அற்றவர்கள் அல்லது அவ்வாறானதோர் அடித்தளத்தைப் பெற முடியாதவர்கள் என்கின்ற அர்த்தமா அது? சீதனத்தினால் மட்டுமா பெண்களிற்கு பொருளாதார அடித்தளம் அமைகிறது?

பல இடங்களில் சீதனம் வாங்கும்போது அதில் ஒரு பங்கை தங்கை திருமணத்திற்கும், மற்றோர் பங்கை தாலி, கூறைக்கும் என்று பிரித்துச் செலவழிப்பதை மறந்துவிடக்கூடாது. அதேவேளை சீதனக்காசில் தன் வேலைவாய்ப்பைத் தேடிக்கொண்ட மாப்பிள்ளைமாரும் எம்மிடையே நிறைய இருக்கிறார்கள். சீதனப் பணத்தை வங்கியிலிட்டுவிட்டு வரும் வட்டியை மட்டும் செலவு செய்துகொண்டிருக்கும் பல குடும்பத்தலைவர்களும், கள்ளுக் கொட்டகையில் மனைவியின் சீதன நகை, பாத்திரங்களை அடைவு வைத்துவிட்டு முழுவெறியில் பிரதிஷ்டை செய்தபடி வீடுவரும் குடிமகன்களும் எம்மிடையே இருக்கிறார்கள். இந்த நடைமுறைகளைப் பார்த்த

சீதனமாக பரிமாறப்படும் சொத்துக்கள் மணமகளுக்கு மட்டுமன்றி, மணமகனுக்கும் மணமகனின் குடும்பத்தினருக்குமாக பல்வேறு வடிவங்களில் பகிர்ந்தளிக்கப்படுகிறது. வீடு, காணி, நிலம் என்ற ரீதியில் மணமகனுக்கும் சொத்துரிமை சேர்த்து எழுதப்படுவதுடன் மணமகனுக்கு பிரத்தியேகமாக ரொக்கப்பணமும் மணமகனின் குடும்பத்தாருக்கு ''அன்பளிப்பாக'' ஒரு பெரிய தொகையும் வழங்கப்படும் முறைமை இன்று யாழ்ப்பாணத்தில் பரவலாக கடைப்பிடிக்கப்படுகிறது. சாதி, குலம், சமூக அந்தஸ்து மாப்பிள்ளையின் பட்டம், படிப்பு, உத்தியோகம் என்ற வகையில் சீதனப் பொருளுடமையின் ஏற்றங்கள் இறக்கங்கள் கணிக்கப்படுகின்றன. இதோடு மாத்திரமின்றி விமானச்சீட்டாகவும் சிங்கப்பூர் தங்கமாகவும் அமெரிக்க டொலராகவும் சீதனச்சொத்து உருமாற்றம் பெற்று வெளிநாடுகளுக்கும் பயணம் மேற்கொள்கிறது. இவ்வாறாக இன்று நடைமுறையில் விஸ்வரூபப் பரிமாணம் பெற்றிருக்கும் இந்தச் சீதன விவகாரம் பற்றி தணிகாசலம் அவர்கள் அறிந்திராதது ஆச்சரியப்படவேண்டியதொன்று. ஆரிய சக்கரவர்த்திகள் காலத்து பழமையில் புதைந்து போய்க்கிடக்கும் அவர் தாய்வழிச் சீதன முறைமைதான் இன்றும் யாழ்ப்பாணத்தில் தொடர்ந்து வருவதாக கற்பிதம் செய்வது மிகவும் தவறானதாகும்.

அசையும் பொருளாகவும் அசையாத பொருளாகவும் சீதன சொத்துடமை மணமகனை சென்றடைகிறது. மணப்பெண்ணுக்கு எழுதப்படும் அசையா சொத்துக்கள் கூட மணமகனின் கட்டுப்பாட்டின் கீழ் தான் வருகிறது. கணவனின் ஒப்புதல் இன்றி மனைவி தனது சீதன சொத்தை தான் விரும்பியபடி கையாள முடியாது. தேச வழமைச் சட்டமும் அப்படித்தான் விதித்திருக்கிறது. இது ஒருபுறமிருக்க, சீதன சொத்தை கரைத்து குடும்பம் நடத்துபவர்கள், சீதனக்காணியை அடகு வைத்து பிள்ளைகளை படிப்பிப்பவர்கள், மனைவியின் நகையை விற்றுக் குடித்து அழிப்பவர்கள் - இப்படியாக ஏராளமான ஆண்கள் பெண்ணின் சொத்துடமையை ஏப்பம் விடுவதுமுண்டு. உண்மை நிலை இப்படியிருக்க, பெண்ணின் சீதனச் சொத்து என்றும் அழியாத சிரஞ்சீவிப் பொருளாக, தாய்வழி மரபில். பரம்பரை பரம்பரையாக பெண்ணுடமையாக நிலைத்து நிற்கிறது என தணிகாசலம் அவர்கள் தான்தோன்றித் தனமாக ஏதோ எல்லாம் எழுதுகிறார். இது எல்லாம் உண்மைக்குப் புறம்பானது. தணிகாசலத்தாரின் கணிப்பின்படி யாழ். குடாநாட்டு நிலப்பரப்பு முழுவதும் பெண்ணின் சீதனக் காணியாகவே கருதவேண்டிவரும்.

தனது பெண்பிள்ளைகளுக்கு வரன் தேடுவதில் வாழ்க்கை பூராவும் உழன்று கஷ்டப்பட்டு கடனாளியாகப் போய்விட்டதாக திரு. தணிகாசலம் ஒப்பாரி வைப்பதைப் பார்க்கும்போது அவர் மீது அனுதாபம் தான் ஏற்படுகிறது. ஆனால் அவர் யாருக்காக உழைத்தார், யாருககாக உழன்றார், யாருக்காக வயிற்றைக்கட்டி, வாயைக்கட்டி, விரதம் கிடந்து சீட்டுப்பிடித்தார், என்று ஆராய்ந்து பார்த்தால் ஒரு மெய்யுண்மை புலப்படும். அதாவது அவர் தனது பெண்பிள்ளைகளுக்கு மாப்பிள்ளைகள் ஆகிவிட்ட ஆண்களுக்கு சொத்துச் சேர்க்கவே வாழ்நாள் பூராகவும் உடலை முறித்திருக்கிறார் என்ற உண்மை தெரியவரும். தான் வாங்கிய சீதனச் சொத்தோடு, தான் உழைத்துச் சேர்த்து தேடிய தோட்டத்தையும் மருமகன்மாருக்கு தாரை வார்த்துக் கொடுத்துவிட்டு அவர் தனது பெண்பிள்ளைகளைத் திட்டுவதில் எவ்வித அர்த்தமும் இல்லை.

தனது சொந்த வாழ்பனுபவத்திலிருந்து சமூக எதார்த்தத்தை சித்தரிப்பதாக திரு. தணிகாசலம் அவர்கள் கூறுவதை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. ஒரு தனிமனிதனின் தனிப்பட்ட வாழ்பனுபவத்திலிருந்து சமூக உண்மைகளை நாம் கண்டுகொள்ள முடியாது. ஏனெனில் சமூகப் புறநிலைகளே தனிமனித மனவுலகை வனைந்து விடுகிறது.

சீதன வழக்கு முறையால் பெண்கள் பயனடைகிறார்கள் என்றும் ஆண்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்றும் தணிகாசலத்தார் எவ்வித ஆதாரமுமற்ற ஒரு குதர்க்கமான வாதத்தை முன் வைக்கிறார். அது மட்டுமன்றி, சீதனம் ஒரு பிரத்தியேகமான பெண்

**30-04-93** இல் உதித்த வெள்ளி மஞ்சரியில் ''சீதனம்: பயனடைவது பெண்கள்; பாதிக்கப்படுவது ஆண்கள்'' என்ற தலைப்பிலான விவாதமேடை சிந்திக்க வைப்பதாக இருந்தது. ஒருவன், ஒருத்தி அவர்களது குழந்தைகள் என்ற ஒரு குடும்பத்தினது அனுபவங்களையும், இயலாமைகளையும் வைத்துக் கொண்டு ஒரு பெரிய பிரச்சினையை இனம் காட்ட முயல்வதுகூட பெரிய தவறென்றே கருதுகிறேன். அந்த விவாதமேடையை அமைத்திருந்த பெரியவர் க. தணிகாசலம் அவர்களின் கருத்துகள் பல என்னோடு மாறுபடுவதனை உணரக் கூடியதாக இருந்தது. அந்த விவாதமேடையைப் போன்றே என் கருத்துகளிற்கும் களம் அமைத்துத்தந்தால் பெண்கள் சார்பில் ஈழநாதத்திற்கு பெரிதும் நன்றியுடையவளாக இருப்பேன்.

முதலில் தன் சொந்த வாழ்வினை மையமாகக் கொண்டே எழுதப்பட்டு அமைந்த அந்த கட்டுரையை தன் பரந்த அனுபவத்திலிருந்து எழுதுவதாக கட்டுரையாளர் குறிப்பிட்டுள்ளார். அத்தோடு ''பெண்நிலை வாதிகள்'' கட்டாயமாக தனது கருத்துக்களை புறக்கணிப்பார்கள் என்றும் குறிப்பிட்டார். இந்த ஒரு சந்தர்ப்பமே தங்கள் உரிமைகளை வென்றெடுக்க விழித்தெழுந்திருக்கும் மிகச் சிறியளவான பெண்கள் கூட்டத்தினை ''பெண்நிலை வாதிகள்'' என்ற வட்டத்துள் அடக்கிப் புறக்கணிக்கும் ஆணாதிக்கத்தினை எடுத்துக் காட்டுகிறது. திரு. தணிகாசலம் போன்ற பெரியவர்கள் கூட பெண்களின் புரட்சிக்குப் புது அர்த்தங்களை அணிவிக்க முயல்வது மிகவும் கவலைக்குரியதொன்றே.

மணப்பெண்ணிற்கு திருமணத்தின்போது வழங்கப்படும் சொத்துடமையைச் சீதனம் என்று எழுதியிருந்தார். ஆனால் 98வீதமான திருமணங்கள் (பலகாதல் திருமணங்கள் தவிர) மணப்பெண்களிற்கு மட்டும் ஏன் சீதனம் வழங்கப்படுகிறது? ஒரு குடும்பத்தினை நிர்வகிக்கப்போகின்ற மணமகனிற்கும், மணமகளிற்கும் ஏன் இருதரப்பாரும் சீதனம் வழங்குவதில்லை? என்கின்ற கேள்விகளுக்கு அவரது விவாதமேடை விடையளிக்க

**பாரதிப் பிரியா**

வில்லை. அதேநேரம் சீதனத்தால் ஆண்கள் தான் பாதிக்கப்படுகிறார்கள் என்ற கருத்தை எல்லாவிதத்திலும் வெளிக்கொணரும் ஒரு முயற்சியாகவே அது அமைந்திருந்தது. தேசவழமைச் சட்டம் எதையும் சொல்லட்டுமே! யாழ்ப்பாணத்து நிலமும், சொத்தும் பெண்களின் ஆதிபத்தியத்தின் கீழ் இருந்துவருவதாக அங்கலாய்க்கும் ஆசிரியர் தணிகாசலம் அவர்கள், சீதனம் இன்மை என்ற ஒரே ஒரு காரணத்திற்காக மட்டும் வாழ்விழந்துபோன எத்தனையோ பெண்களை சுலபமாக மறந்துபோனார். ''மனைவியின் ஒப்புதல் இன்றிச் சீதனச் சொத்துடமைமீது கணவர் கைவைக்க முடியாது'' என்ற கருத்து வெறும் சட்டப்புத்தகத்தில் பொறிக்கப்பட்டிருக்கலாம். ஆனால் மனைவியின் ஒப்புதலை பலாத்காரமாக பெற்றுக் கொள்ளக்கூடிய திறமை ஆண்களிடம் உள்ளவரை அந்தச் சட்டம் வெறும் ஏட்டளவிலானதே.

அடுத்ததாக தன் மனைவியின் சீதனம் தன் மூத்த மகளிற்கு கையளிக்கப்பட்டதாக ஆதங்கிற்கும் ஆசிரியருக்கு அதே சீதனம் அவர் தன் மகளிற்கு சம்பாதித்திருக்க வேண்டிய சீதனப்பளுவை குறைத்திருக்கிறதல்லவா? அந்தச் சொத்துக்கள் மனைவி கொண்டுவந்திராவிட்டால் தன் மகளிற்காக இவரே அதைச் சம்பாதித்திருக்க வேண்டும். இப்படிப்பார்க்கும் சந்தர்ப்பத்தில் சந்தர்ப்ப வசமாக சீதனத்தால் பயனடைவது குடும்பத்தலைவர்கள் எனப்படுகின்ற ஆண்களாகி விடுகிறார்கள் அதே சீதனம் மகளின் மகளிற்கு கையளிக்கப்படும் பட்சத்தில் பயனடைவது ஆசிரியரின் மருமகனாகப்போகிறார். வெறும் பத்திரங்களில் சொத்துகளை எழுதி வைத்திருப்பதால் பெண்கள் பயனடைந்து விடுவது இல்லை என்பதை இங்கு உறுதியாக வலியுறுத்துகிறேன்.

வாயைக் கட்டி வயிற்றைக்கட்டி, சீட்டுப்பிடித்து கடன் பட்டெல்லாம் இவர் தன் மற்றைய பெண்களிற்காக சீதனம் சம்பாதித்ததாகவும், தற்போது தான் ஓய்வுபெற்ற கடனாளியாகவும் இருப்பதாக தணிகாசலம் ஐயா அவர்கள் எழுதியிருந்தார். ஆசிரியரான இவரே சீதனத்தை வலியுறுத்தும் முகமாக தன்மகள்களுக்கு முனைந்து உழைத்திருக்கிறார். என்பது உண்மைதான்.

ஆனால், அவர் அவ்வாறு உழைக்காமல் சீதனம் சம்பாதித்திருக்காமல் இருந்திருந்தால் நிச்சயமாக அவருடைய மகள்மாரிற்கு திருமணம் நடந்திருக்கப் போவதில்லை. அப்படி இருக்கும் பட்சத்தில் தாம்பத்திய வாழ்வு அப்பெண்களிற்கு இல்லாமல் அதாவது எட்டாமல் போகிறது. இதனால் பாதிக்கப்படுவது யார்? அந்தப் பெண்கள் தானே! இதைப் போல சீதனமின்மையால் தாம்பத்தியம் எட்டாமல் போன ஆண்கள் யாராவது இருக்கிறார்களா? இவ்வாறிருக்க ''சீதனப்பிரச்சினை என்பது ஆணுலகம் எதிர்கொள்ளும் ஒரு சமூகப்பிரச்சினை. இது பெண்கள் பிரச்சினை அல்ல'' என்பது மிகவும் பொருளற்றுப் போகிறது. ஆனாலும் தங்கள் சிக்கனத்தாலும், வேறு விதமாகவும் தன் பெண்களிற்கு தாயார் கூட சீதனம் தேடுகிறார் என்பதை கட்டுரையாளர் ஏனோ மறந்துவிட்டார். ''சீதனப்பிரச்சினையால் பெண்கள் பாதிக்கப்படுவதில்லை'' என்ற இவரது கருத்து தேய்ந்து போய் விடுகிறது.

நான் சாதாரண மாணவிதான். தணிகாசலம் ஐயா அவர்கள் வயதாலும் அறிவாலும் என்னிலும் பலமடங்கு பெரியவர்தான். ஆனால், அவரின் பெண்கள் திருமணம் செய்துவிட்டிருப்பதால் இன்றைய பெண்களைப் பற்றிய அனுபவஞானம் அவரிடம் பற்றாக்குறையாக இருக்கிறது. ''பெண்கள் வீட்டிலேயே சும்மா இருக்கிறார்கள்'' என்ற இவரது கூற்று இன்னமும் யதார்த்த நடப்பை இவர் புரிந்து கொள்ளவில்லை என்பதன் குறிகாட்டியே.

தம் பெண்களின் விருப்பு வெறுப்பிற்கேற்ப ஒரு வரனைத் தேடுவதும், அவர்கட்கான சீதனம் சம்பாதிப்பதும் ஆண்களினது மட்டும் சுமையல்ல. பத்து மாதம் சுமந்து பெற்ற தாயினதும், ஏன் மணமகளினதும் கூட சுமையாகிவிட்ட காலம் இது. இவரது பெண்கள் ''அப்புவின் பொறுப்பு'' என்றுவிட்டு சும்மாயிருந்திருக்கலாம். ஆனால் இன்றைய குடும்ப நடப்புகள் பத்தொன்பதாம் நூற்றாண்டினை முழுமையாக மறந்து கொண்டிருப்பதை ஆசிரியர் உணர்ந்தேயாக வேண்டும். இன்றைய பெண்களில் பெரும்பாலானோர் இவரது பெண்களின் மன நிலையில் இல்லை என்பதை புரிந்து கொள்ள வேண்டும். பெற்றோரின் கஷ்டங்களை நீக்க நெசவடிக்கும் பெண்களும், பாய், பெட்டி, கடகம் இழைத்தல் என சுயதொழிலிலீடுபடும் பெண்களும் எம்மிடையே நிறைய இருக்கிறார்கள்.

''பெண்பிள்ளைகள் பெற்றோரிடமிருந்து சீதனத்தை எதிர்பார்க்கிறார்கள்'' என்று குறிப்பிடும் இவரின் கருத்தை நான் வலுவாக ஆட்சேபிக்கிறேன். சீதனத்தை ஆண்களைப் பெற்ற பெற்றோரே (தாயும் தந்தையும்) எதிர்பார்க்கிறார்கள். தங்கள் மகனின் திறமையை, பெருமையை வெளிக்கொணரக் கூடிய அளவாக சீதனத்தை கருதுகிறார்கள். அதேவேளை தன் பெண்ணிற்கு மணவாளன் தேடிக் கொடுப்பதை பெற்றோர்கள் சுமை என நினைக்கலாமா என்றே தோன்றுகிறது. இவை போன்ற சுமையெல்லாம் வெறுமே குடும்பத்தலைவனை மட்டுமே அழுத்துகிறது என்று சொல்லிக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை. பிள்ளைகளை பெற்றவர்கள் அவர்களைப் பளுவாகக் கருதுவதும் நியாயமில்லை.

எங்கள் மத்தியில் சீதன விஷம் எவ்வாறு பரவியது என்று ஆராய்வதில் அர்த்தமில்லை. அந்தவிஷத்தை நீக்க, புது வழிகள் கண்டறிவதும் நடைமுறைப்படுத்துவதும் மட்டுமே பயன் தரக்கூடியது.

சீதனம் என்கின்ற சம்பிரதாயம் எல்லா சமூக மட்டங்களிலும். பரவியிருப்பதுடன் தற்காலத்தில் நிர்ப்பந்தமாகவும் வளர்ந்து விட்டிருக்கிறது என்ற உண்மையை ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் ''சீதன முறை பெண்களிற்குச் சாதகமானது. பெண்களின்

நான் தயங்கவே மாட்டேன்.

சீதனம் பெண்களிற்கு சுயசார்பான ஒரு பொருளாதார அடித்தளத்தை உருவாக்கிக் கொடுப்பதாக எழுதியிருந்தார். சீதனமில்லாத பெண்கள் சுயசார்பான பொருளாதார அடித்தளம் அற்றவர்கள் அல்லது அவ்வாறானதோர் அடித்தளத்தைப் பெற முடியாதவர்கள் என்கின்ற அர்த்தமா அது? சீதனத்தினால் மட்டுமா பெண்களிற்கு பொருளாதார அடித்தளம் அமைகிறது ?

பல இடங்களில் சீதனம் வாங்கும்போது அதில் ஒரு பங்கை தங்கை திருமணத்திற்கும், மற்றோர் பங்கை தாலி, கூறைக்கும் என்று பிரித்துச் செலவழிப்பதை மறந்துவிடக்கூடாது. அதேவேளை சீதனககாசில் தன் வேலைவாய்ப்பைத் தேடிக்கொண்ட மாப்பிள்ளைமாரும் எம்மிடையே நிறைய இருக்கிறார்கள். சீதனப் பணத்தை வங்கியிலிட்டுவிட்டு வரும் வட்டியை மட்டும் செலவு செய்துகொண்டிருக்கும் பல குடும்பத்தலைவர்களும், கள்ளுக் கொட்டகையில் மனைவியின் சீதன நகை, பாத்திரங்களை அடைவு வைத்துவிட்டு முழுவெறியில் பிரதிஷ்டை செய்தபடி வீடுவரும் குடிமகன்களும் எம்மிடையே இருக்கிறார்கள். இந்த நடைமுறைகளைப் பார்த்த பின்னும் ''பெண்களே தமது பொருளுடமை சக்தியைக் கொண்டு ஆண்களை விலைக்கு வாங்குகிறார்கள்'' என்று சொல்வது கருத்தற்றது. அதேவேளை மாமியாரிடம் ''சீதனம் குறைவு'' என்ற காரணத்திற்காக லட்சார்ச்சனை வாங்கும் மருமகள்மார்கூட தணிகாசலம் ஐயா சொன்னது போல் சீதனத்திற்கு மேலால் இன்னும்கூட பணம் போட்டு மாமியார், மாமனாரையும் விலைக்கு வாங்கிவிட வேண்டும் போலும். எனவே சீதனம் என்பது ஒருபோதும் பெண்களின் மேல்நோக்கிய அசைவிற்குக் காரணமாக அமைந்து விடுவதில்லை.

என்னதானிருப்பினும் நல்ல மாப்பிள்ளைகளை எதிர்பார்த்து பெண்கள் காத்திருக்கிறார்கள் என்பது உண்மைதான். உண்மையில் ஆண்கள் கூட அப்படித்தானே. ஆனால் அந்தஸ்து என்கின்ற ஒரு வெறும் போர்வையை பெரிதாகக் கருதிக்கொண்டு அல்லல் படுவதென்னவோ பெற்றோர்தான். ஆனாலும் தணிகாசலம் ஐயா அவர்கள் சொத்துடமை இல்லாததால் தமக்கேற்ற மணவாளன் கிடைக்காமல் பெண்கள் இருக்கிறார்கள் என்பதை ஒத்துக்கொண்டிருக்கிறார். ஆனால் தனக்குப் பிடித்தவனை திருமணம் செய்வதென்பது யாரும் தலையிடமுடியாத பெண்களின் உரிமை ஆகும். இதை பெண்களின் ''அகம்பாவப் பிரச்சினை'' என்று கொச்சைப்படுத்தியிருந்தமை, ஆண்கள் கூட ''பெண் கறுப்பு, மூக்கு வடிவில்லை, பல் மிதப்பு'' என்றெல்லாம் பெண்களை விமர்சித்து மறுக்கும் சந்தர்ப்பங்களை ஆண்களின் அகம்பாவமாக ஏனோ கருதாது போனார்.

''பழமை பழமையென்று பாவனை பேசவன்றி பழமை இருந்த நிலைகிளியே பாமரரேதறிவார்'' என்று பாரதி சொன்னதுபோல மூட நம்பிக்கைகளிற்கும், சாதி, மதங்களுக்கும் அவரவர் பிள்ளைகளை பெற்றோர்தான் பலிகொடுக்கிறார்கள். அதேவேளை தணிகாசலம் ஐயா அவர்கள் சொன்னது போல காதல் திருமணங்களால் மட்டுமே சீதனப் பிரச்சினைக்கு தீர்வு வைக்க முடியும். ஆனால் இந்தப் பிரச்சினைக்கு தெரிவுக்குழு நியமிக்க முடியாது. நாம்தான் எங்கள் பிரச்சினைக்கு தீர்வு காணவேண்டும்.

ஆனால் இவர் சொன்னதுபோல சீதனப் பிரச்சினையை தீர்க்க பெண்களிடையே மட்டும் மனப்பாங்கு மாறினால் போதாது. ஆண்களிடமும் கூட மாறத்தான் வேண்டும். ''நான் சீதனம் வாங்காமல் திருமணம் செய்வேன்'' என்பதில் இளைஞர்களும், ''நான் சீதனமெதுவும் கொடாமல்தான் திருமணம் செய்வேன்'' என்பதில் பெண்களும் திடமாக இருக்க வேண்டும். எனவே இந்தப்பிரச்சினை தீர எம் சமூகத்தின் மனப்பாங்கும், பெண்களிடையே நம்பிக்கையும் கல்வித்திறனும் மாறவேண்டும். பெண்களனைவரும் ''தாம்பத்தியம் மட்டுமல்ல வாழ்க்கை'' என்பதை புரிந்துகொண்டு ஆணாதிக்க வெறியர்கட்கு தம் செய்கையால் பதிலடி கொடுக்க வேண்டும்.

# இன்று எரித்திரியா: நாளை தமிழீழம். உறுதிபூண்ட மக்கள் இனம்

## விடுதலை பெறுவது வரலாறு

**1991** ஆம் ஆண்டின் மே மாதத்தின் இறுதி நாட்கள் அவை; செங்கடலின் நுழைவாயிலாக அமைந்திருந்த எரித்திரி மண் சிவந்த நாட்கள்; சீருடையாக குறுகிய காற்சட்டையையும், பண்ணிற மேலங்கியையும் இறப்பரிலான பாதணிகளையும் அணிந்த எரித்திரிய மக்கள் விடுதலை முன்னணி போராளிகள் தமது வீரம் செறிந்த போராட்டத்தின் இறுதி இலக்கினை அடைந்த நாட்கள்; மே 24-ம் திகதி தலைநகர் அஸ்மாரா மீண்டும் போராளிகள் வசமாகின்றது. உள்ளூர் தளபதி ஓடித்தப்ப ஓர் இலட்சம் எத்தியோப்பிய துருப்புக்கள் டாங்கிகள், பீரங்கிகள் சகிதம் தலை குனிந்து சரணடைகின்றன. நீண்டகாலமாக அடிஸ் அபாபாவோடு துண்டிக்கப்பட்டு தொடர்ந்த தாக்குதல்களால் சோர்வடைந்திருந்த இவ் இராணுவப் பிரிவு எத்தியோப்பியாவின் 2ஆவது பெரிய பிரிவாகும். ருஷ்யாவால் வழங்கப்பட்டு எத்தியோப்பிய இராணுவம் கைவிட்டுச் சென்ற T 54 ரக டாங்கிகள் பல ஏற்கனவே எரித்திரியாவில் இருந்தன. தமிழீழ போராளிகட்கு சிங்களப்படை இராணுவத் தளபாடம் விநியோகித்ததுபோன்றதுதான் இதுவும். அடுத்த நாள் செங்கடல் துறைமுகமான அசாப்பும் வீழ்கிறது. இதன் வீழ்ச்சியோடு எத்தியோப்பியாவின் ஒரேயொரு கடல்வழித் தொடர்பும் அற்றுப்போக பஞ்சத்தால் வாடும் தனது 70 இலட்சம் மக்கட்கு உணவைப் பெறும் வழியையும் இழந்து அதுதவிக்க நேரிடுகின்றது முழு எரித்திரியாவும் விடுவிக்கப்பட்டதாக எரித்திரிய முன்னணித் தலைவர் இசாயஸ் அபவேககி (Issayas Afewarke) அறிவிக்கிறார். இதே நேரம் இன்னொரு பாரியபடையணி அடிஸ் அபாபாவை அண்மிக்கிறது. இதற்கிடையில் தனது 16 வருட ஆட்சியின் வீழ்ச்சியை உணர்ந்த கேணல் மெங்கிஸ்து கெய்லி மரியம் விறைப்பான பேச்சுக்களை கைவிட்டு தனதுபழைய நண்பரான சிம்ப்பாவே பிரதமர் முகாபேயிடம் தப்பியோடி தஞ்சம் புகுகிறார் மே 28-ம் திகதி எதியோப்பிய புரட்சிகர சனநாயக முன்னணியின் படையின் நேர்த்தி மேற்குலக இராசதந்திரிகளைப் பெரும் திகைப்பிற்கு உள்ளாக்கியுள்ளது. 36 வயதான முன்னாள் வைத்தியக் கல்லூரி மாணவரான மெலஸ் செனாவி தனது இயக்கத்தின் A. K. சுடுகுழல் பொறித்த கொடியைக் காட்டி இதற்கு இனிமேல் அதிகம் தேவை இருக்காது என நம்புகிறேன் எனப் புன்சிரிப்போடு அன்று கூறியது உண்மையாகி விட்டது. ஒற்றுமைப்பட்ட எத்தியோப்பியாவை உருவாக்க விரும்புவதாகக் கூறும் அவர் தனது பழைய மாக்சிய கடும் கோட்பாட்டுத் தன்மையைக் கைவிட்டு பன்மைத் தன்மை கொண்ட சனநாயக வழிமுறைகளை ஏற்பதாகக் கூறிவிட்டார். இசுலாமியராக இருந்த போதும், இசுலாமிய அரபு நாடுகள் உதவியோடு டதவிக்கு வந்தாலும், மத சகிப்புத் தன்மை இன்று நிலவுவது போராளிகளின் அரசியல் முதிர்ச்சியைப் புலப்படுத்துவதாகக் கருதப்படுகின்றது. எனவே 3000 வருடத்தின் பின் உண்மையான சனநாயகம் அங்கு தோன்றுகின்றது.

தொடக்கத்தில் பிணக்குகள் ஏற்பட்ட போதும் இறுதியில் உடன்பாடொன்றை எட்டி இரு வருடத்தின் பின் எரித்திரியாவில் மக்கள் கருத்தறியும் வாக்கெடுப்பினை நடாத்தி மக்கள் முடிவினை ஏற்பதாகவும் அதுவரை எரித்திரிய துறைமுகங்களைப் பயன்படுத்த எத்தியோப்பியாவை அனுமதிப்பதாகவும் ஏற்று அடவேக்கியும், செனாவியும் தமது உறவுகளைச் சுமுகமாக்கிக் கொண்டனர். எனவே இரண்டு வருடம் முடிய - சில நாட்கள் முன் வாக்கெடுப்பு நடக்க - 98.8% எரித்திரிய மக்கள் பூரண விடுதலையை வேண்டிநிற்க - எத்தியோப்பியா உட்படப் பல நாடுகள் அங்கீகரிக்க - பூமிப்பந்திலே புதிய தேசமாக எதிர்வரும் 24 ஆம் திகதி எரித்திரியா உதயமாகின்றது. இன்று நடந்ததை எண்ணி ஆனந்தக் கண்ணீர் சொரியும் எரித்திரிய மக்கள் தாண்டி வந்த தடைகள் எத்தனை? பஞ்சத்தாலும், இராணுவ அடக்கு முறையாலும் உயிரிழந்த இலட்சக்கணிய இராணுவ மேற்பார்வையில் வருகின்றன எத்தியோப்பியாவின் மன்னர் கெய்லி சலாசியின் ஆட்சியை பிரித்தானியா மீண்டும் ஏற்படுத்துகின்றது. கிறித்தவரான இவர் மேற்குலக விசுவாசி. அரபு நாடுகளுக்கு அஞ்சியவர் (எத்தியோப்பியா, எரித்திரியா இவ்விரு நாடுகளிலுமே ஏறத்தாழ சம அரை பங்கினராக முசுலிம்களும், கிறித்தவரும் இருப்பது குறிப்பிடத்தக்கது.)

1950 ஆண்டளவில் எரித்திரியாவை எத்தியோப்பியாவோடு இணைத்து கூட்டாட்சி மாநிலமாக்க ஐ. நா. முடிவு செய்கிறது இது விடுதலையை எதிர்பார்த்த எரித்திரியாவின் தலையில் மண்ணை அள்ளிப் போட்டது. நிலத்தால் சூழப்பட்ட கடல் வழித்தொடர் பற்ற எத்தியோப்பியாவுக்காக எரித்திரியர் சுதந்திரம் அன்று அடகு வைக்கப்பட்ட நிகழ்ச்சி 1947 இலங்கை சுதந்திரம் பெற்றபோது தமிழீழத்திற்கு நேர்ந்ததை ஒத்திருக்கின்றது. அக்காலகட்ட தமிழ்த்தலைவர்கள் போலவே சில எரித்திரிய தலைவர்களும் இதற்கு ஒத்துழைத்தமை இங்கு குறிப்பிடத்தக்கது எனவே அன்றிலிருந்து ஆபிரிக்காவின் கொம்பு போல துருத்தி நிற்கும் இப்பகுதி வல்லரசுகள் உரசிப் பார்க்கும் போர்க்களம் ஆனது. அமெரிக்காவின் பூரண விசுவாசியாக கெய்லி சலாசி மாற இப்பகுதியில் தனது மூக்கை நுழைக்கும் கொக்கு போல வாய்ப்பை பார்த்து காத்திருந்தது சோவியத் ஒன்றியம்.


வாய்ப்பும் வந்தது. 1958-ம் ஆண்டளவில் வெளிநாடுகளில் தஞ்சம் புகுந்திருந்த எரித்திரியர் சிலரால் எரித்திரிய விடுதலைமுன்னணி(E. L. F) உருவாக்கப்பட்டது. எவ்விதநிபந்தனையும்இன்றிசோவியத்இதனைஆதரிக்க முன்வந்தது. கியூபாவிற்கு ஊடாக பயிற்சி மட்டுமன்றி இராணுவ உதவிகளையும் தாராளமாக சோவியத் செய்தது. எரித்திரியாவைப் பயன்படுத்தி எத்தியோப்பியர்களுக்கு அழுத்தம்

களை ஒன்றிணைக்க முடியவில்லை. கட்டுப்பாடற்ற போராளிகளின் இழிவான நடவடிக்கைகள் மக்களைப் பெரும் வெறுப்புக்கு உள்ளாக்கின. இராணுவ ரீதியாகவும் முன்னணி தளரத் தொடங்கிற்று இக்காலகட்டத்திலே உலகை உலுக்கிய படுகொலைச் சம்பவம்ஒன்று 'கெரேன்' பகுதியில் நடைபெற்றது.

ஏறத்தாழ ஐந்நூறுபேருக்கு மேல் எத்தியோப்பிய இராணுவத்தால் கொல்லப்பட்ட இசசம்பவத்தைத் தொடர்ந்து அண்டை நாடான சூடானுக்கு 1967 முதல் பெருமளவு எரித்திரியர் அகதிகளாகச் செல்லத் தொடங்கினர். இவைகாரணம்பற்றி ELF இயக்கத்துள் பெரும் முரண்பாடு தோன்றியது. இதன் விளைவாக 1970 ஆண்டளவில் எரித்திரிய மக்கள் விடுதலை முன்னணி உருவாக்கப்பட்டது. ஒ முக்கூடும். கட்டுப்பா

கமற்ற ஒற்றுமை வல்லரசுகளின் துரோகத்தனங்கள் பின்னான காலப்பகுதியில் எரித்திரிய மக்களைத் தீயிலிட்ட புழுவாக வாட்டி வதைத்தன.

வல்லரசுகள் நிழற்போர்த்தளமாக அவர்களின் நலன்கட்காக முட்டிமோதிய ஏவல் தளமாக இப்பகுதியை ஆக்கின. 1974-ம் ஆண்டளவில் எத்தியோப்பியாவிற்கேற்பட்ட கொடிய பஞ்சம் காரணமாக அமெரிக்க கைப்பொம்மை கெய்லி சலாசி உயர்மட்ட இராணுவ சதிப்புரட்சியால் தூக்கி எறியப்பட்டார்.




மாக்சிய கடும் கோட்பாட்டாளராக தன்னை இனம் காட்டியகேணல்மெங்கிஸ்து கெய்லி மரியம் பதவிக்கு வந்தார். சோவியத் பாணியில் ஆட்சி நடாத்தினார். என்றாலும் எரித்திரியர் தன்னாட்சியை மட்டும் மறுத்தார். மீண்டும் வல்லரசுகட்கு சங்கீத கதிரை விளையாட நேரம் வந்தது.

பாடு இச்சமன்பாட்டில் எரித்திரியா கழிக்கப்பட்டது அதன்படி எரித்திரியா தமது தன்னாட்சிக் கோரிக்கையை கைவிட்டு கூட்டாட்சி அடிப்படையில் எத்தியோப்பியாவை இணையுமாறு சோவியத்தால் கடுமையாக வற்புறுத்தப்பட்டது. இதிலுள்ள பெருத்த அவலம் என்னவென்றால் 1950 களில் ஐ. நா. எரித்திரியாவை இவ்வாறு வற்புறுத்திய போது ''உலக புரட்சியின் புதிய கதாநாயகனாக'' அப்போதிருந்த சோவியத் அத்தனைக் கடுமையாக எதிர்த்ததுதான். இப்போது கதை வேறு 'ஐயகோ' என எரித்திரிய போராளிகள் தலையில் அடித்துக் கொண்டனர், தீர்க்கமாக மறுத்தனர் விளைவு சற்றும் தயங்காது சோவியத் எரித்திரியருக்கு எதிரான எத்தியோப்பியாவின் போரில் கலந்து கொண்டது 1978 யூலைநாள் எத்தியோப்பிய எரித்திரியாவுக்கு எதிராக மேற்கொண்ட பாரிய படையெடுப்பில் ஓர் இலட்சம் எத்தியோப்பிய துருப்புக்கள், 4000 கியூபா துருப்புக்கள், 250 சோவியத் இராணுவ ஆலோசகர்கள் கலந்து கொண்டனர் மிகக் கடுமையான இப்படையெடுப்பால் எரித்திரியா நாசமாகிற்று பல்லாயிரம் எரித்திரியர் கொல்லப்பட $3\frac{1}{2}$ இலட்சத்திற்கு மேற்பட்டோர் அகதிகளாக சூடானுக்குச் செல்ல சில மலைப் பகுதிகளைத் தவிர மற்றைய பகுதிகளை EPLF இழந்தது பின் சூடானில் தளம் அமைத்து தன் போராட்டத்தை மனம் தளராது தொடங்கிற்று. அதையும் தடுக்க 1980 களில் சூடானோடு உடன்படிக்கை ஒன்றை செய்து மிகப் பெரும் இராணுவ நடவடிக்கைகளை இப் பகுதிகளில் கேணல் மெங்கிஸ்து மேற்கொண்டார். இதனால் மேலும் இழப்புக்கள். சோவியத்தால் வழங்கப்பட்டபோர் விமானங்கள் எரித்திரியாவால் தரைமட்டமாகின. மக்கள் பதுங்கு குழிகளில் வாழ்ந்தனர். இக்காலகட்டதில் போதாக்குறைக்கு, EPLF, ELF இயகக முரண்பாடுகளும் கூர்மையடைந்து உள்நாட்டு போர் போல இவை போரிட்டன. ELF ருசிய ஆலோசனைப்படி பேச்சுவார்த்தையில் கலந்துகொள்ள முற்பட EPLF இதனை நிராகரிக்க மோதல் தொடங்கியது.

காலம் வரும் எனகணித்து கவனமாக போராடினர். அவர்கள் எதிர்பார்த்த காலமும் வந்தது. உலக அரசியல் தலைகீழ் மாற்றம்பெற்றது. 1985-ல் பதவிக்குவந்தகோர்பிபேக்கு மெங்கிஸ்துவை கலங்க அடித்தது. சகலவித உதவிகளையும் நிறுத்தி 'பேசிப் பிரச்சினையைத் தீர்க்கப் பார்' என கோர்பி போதித்தார் வல்லரசுகள் தாம் நட்பாகி தம்மை நம்பியோரை அப்படியே கைவிட்டனர். இப்போது எரித்திரிய மக்கள் எதிர்பார்த்த காலம் கனிந்தது. கனிந்த காலத்தைக் கணிப்பிட்டுச் செவ்வனே செயற்பட்டது E. P. L. F அமைப்பு. வரும் இடர்களையெல்லாம் உள்வாங்கிய அவ் இயக்கம் 1982ஆம் ஆண்டே மீண்டும் முனைப்புடன் செயற்படலாயிற்று படிப்படியாக இராணுவ நடவடிக்கைகள் மூலம் விடுவிக்கப்பட்ட பகுதிகளை உருவாக்கியது. அங்கு கல்வி, மருத்துவம், விவசாயம், கைத்தொழில் போன்ற அடிப்படை ஏற்பாடுகளை வளர்த்து சீரான நிருவாகத்தை உருவாக்கியது. ஏனைய அரபு நாடுகள் பல உதவ முன்வந்தன. சூடான், எகிப்து, சிரியா, குவைத் இவை தாராளமாக வாரி வழங்கின. ஐ. நா. அரசு சார்பற்ற தாபனங்கள் எல்லாமே இப்பகுதியின் அபிவிருத்தியில் ஆாவம் கொண்டன.

இன்று இடைவிடாது தொடர்ந்து போராடிய மக்கள் உரிய பயனை அடைந்து விட்டனர். தமது கடும் மாக்சியநிலைப்பாட்டினை மெலன் செனாவி போலவே தாமும் கைவிட்டு உலகின் போக்கிற்கேற்ப சனநாயக பாரம்பரிய அடிப்படையில் அபிவிருத்தியை அடிப்படையாகக் கொண்டு E. P. L. F இயங்குகிறது. அதை உலகம் ஏறகின்றது. இது இன்று. ஆனால் அன்று? சோவியத்வல்லரசு எரித்திரியாவில்நடந்தவிதம். அது அடித்த குட்டிக்கரணங்கள், ஈற்றில் அது வழுக்கிய விதம். அவ்வாறே 16 ஆண்டுகட்கு முன் எத்தியோப்பியாவைக் கைகழுவி சென்ற அமெரிக்காபின் 'மாக்சிய முட்டாள்கள்'' என கேலிப் பட்டம் சூட்டிய அமெரிக்கா இன்றுதாமாகவே முன்வந்து பெருந்தன்மையுள்ள தனவான் போல நடக்கின்றமை நாம் மனம்கொள்ள வேண்டியவை. E.P.L.Fவளர்ச்

உணவைப் பெறும் வழியையும் இழந்து அநுதவிக்க நேரிடுகின்றது முழு எரித்திரியாவும் விடுவிக்கப்பட்டதாக எரித்திரிய முன்னணித் தலைவர் இசாயஸ் அபவேககி (Issayas Afewarke) அறிவிக்கிறார். இதே நேரம் இன்னொரு பாரியபடையணி அடிஸ் அபாபாவை அண்மிக்கிறது. இதற்கிடையில் தனது 16 வருட ஆட்சியின் வீழ்ச்சியை உணர்ந்த கேணல் மெங்கிந்து கெய்லி மரியம் விறைப்பான பேச்சுக்களை கைவிட்டு தனதுபழைய நண்பரான சிம்ப்பாவே பிரதமர் முகாபேயிடம் தப்பியோடி தஞ்சம் புகுகிறார் மே 28-ம் திகதி எதியோப்பிய புரட்சிகர சனநாயக முன்னணியின்

பாலகுமாரன்

(EPRDF) T54 டாங்கிகள் அடிஸ் அபாபாவில் நிலை கொள்ள அண்டை நாடான யேமனுக்கு கடற்படை படகுகளில் ஏறி ஓடித்தப்ப, விமானப்படை சரணடைய, புதியவரலாறு அங்கு ஆரம்பிக்கின்றது.


இதற்கிடையில் பெரும்பழி வாங்கல்கள் இனக்குழு மோதல்கள் காரணமாக இரத்த ஆறு ஓடும் என நினைத்து சுமுகமான ஆட்சிமாற்றத்திற்காக அமெரிக்கா லண்டனில் கூட்டிய சமாதான மாநாட்டிற்கு வேலையே இருக்கவில்லை. முன்னணிப் போராளிகளின் ஒழுங்கும் கட்டுப்பாடும் எல்லாரையுமே வியக்கவைக்கின்றன. நீண்ட காலமாக தலைநகரில் ஆட்சி அதிகாரம் கொண்டிருந்த மேட்டுக்குடி வருக்கமாக தன்னை நினைத்த அம்காரா (Amhara) இனக்குழுவினருக்கு அவர்களது நெடும் பகைவரான ரைகிறே (Tigray) இனக்குழுவினரால் எவ்வித ஆபத்தும் பெருமளவு ஏற்படவில்லை. ஏனெனில் 1988-ம் ஆண்டு உருவாகிய EPRDF கூட்டு முன்னணியில் ரைகிறே விடுதலை முன்னணியே (TPLF) பலம் வாய்ந்தது: 80,000 போராளிகளைக் கொண்டது. அதன் தலைவரான மெலஸ் செனாவியே இம்முன்னணியின் தலைவராகவும் இருந்தார். அதனைவிட 60,000 போராளிகளைக் கொண்டுள்ள எரித்திரிய மக்கள் விடுதலை முன்னணி (EPLF) 7,000 போராளிகளைக் கொண்ட ஒரோமோ (OROMO - OLF) விடுதலை முன்னணியும் இதில் இணைந்திருந்தன 70 இனக் குழுக்களைக் கொண்டிருந்தபோதும் இதுவரை சோமாலியாவில் ஏற்பட்டது போன்ற நிலை இங்கு ஏற்படாதது பெரும் வியப்பில் உலகை ஆழ்த்தியுள்ளது. கூட்டு முன்னணிப்

பியும் தமது உறவுகளைச் சுமுகமாக்கிக் கொண்டனர். எனவே இரண்டு வருடம் முடிய - சில நாட்கள் முன் வாக்கெடுப்பு நடக்க - 98.8% எரித்திரிய மக்கள் பூரண விடுதலையை வேண்டிநிற்க - எத்தியோப்பியா உட்படப் பல நாடுகள் அங்கீகரிக்க - பூமிப்பந்திலே புதிய தேசமாக எதிர்வரும் 24 ஆம் திகதி எரித்திரியா உதயமாகின்றது. இன்று நடந்ததை எண்ணி ஆனந்தக் கண்ணீர் சொரியும் எரித்திரிய மக்கள் தாண்டி வந்த தடைகள் எத்தனை? பஞ்சத்தாலும், இராணுவ அடக்கு முறையாலும் உயிரிழந்த இலட்சக் கணக்கான மக்கள் எத்தனை? எத்தனை? நம்பவைத்து ஏமாற்றி நட்டாற்றில்விட்ட வல்லரசுகளின் சுயநல துரோகச்சதிகள் எத்தனை? இத்தகைய பல ''எத்தனைகளையெல்லாம்'' தாண்டிய மக்கள் கொடுத்த விலையினை தமிழீழ மக்களாகிய நாங்கள் புரிந்தால்தான் விடுதலை வேள்வியில் ஆகுதியாவதன் அவசியம் புரியும். 35 இலட்சம் மக்களின் 30 வருடப் போராட்டம் எமக்கு கற்றுத் தரும் பாடங்கள்பலப்பல. இதன் காரணம் பற்றியே எரித்திரிய மக்கள் வரலாற்றினை ஒருதரம் இங்கு மீட்டல் அவசியமாகின்றது. அது மட்டுமன்றி ஒப்பீட்டளவில் பார்க்குமிடத்தும் பல நிகழ்வுகளில் ஒத்த தன்மைகள் இருப்பது புலப்படுவதையும் எம்மவர் அறிய வேண்டியதும் அவசியமாகின்றது.

தொடக்கத்தில் குடியேற்றவாத காலகட்டத்திலிருந்தே தமிழீழத்திற்கும் எரித்திரியாவிற்கும் பல ஒத்த தன்மைகள் தென்படத் தொடங்குகின்றன. ஆண்டுகளே வேறுபடுகின்றன. 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் இத்தாலியின் குடியேற்ற நாடாக எரித்திரியா மாறியதற்கு அதன் அமைவிட முக்கியத்துவமே பிரதான காரணம். வர்த்தக இராணுவ ரீதியில் முக்கியமான செங்கடலை கட்டுப்பாட்டில் வைத்திருக்க எரித்திரியா எவர்க்கும் அவசியமாகின்றது. எரித்திரியாவின் மசாவா, அசாப் துறைமுகங்கள் எமக்கு திருமலையை நினைவூட்டுகின்றன. 1936-ம ஆண்டு எரித்திரியாவின் பக்கலிலிருந்த எத்தியோப்பியாவை இத்தாலி கைப்பற்றுகிறது பின் இரண்டாம் உலகப்போர் முடிவடைய, இத்தாலி தோல்வியைத் தழுவ இவ்விரு நாடுகளும் பிரித்தா

வல்லரசுகள் உரசிப் பார்க்கும் போர்க்களம் ஆனது. அமெரிக்காவின் பூரண விசுவாசியாக கெய்லி சலாசி மாற இப்பகுதியில் தனது மூக்கை நுழைக்கும் கொக்கு போல வாய்ப்பை பார்த்து காத்திருந்தது சோவியத் ஒன்றியம்.

வாய்ப்பும் வந்தது. 1958-ம் ஆண்டளவில் வெளிநாடுகளில் தஞ்சம் புகுந்திருந்த எரித்திரியர் சிலரால் எரித்திரிய விடுதலைமுன்னணி (E. L. F) உருவக்கப்பட்டது. எவ்விதநிபந்தனையும்இன்றிசோவியத்இதனைஆதரிக்க முன்வந்தது. கியூபாவிற்கு ஊடாக பயிற்சி மட்டுமன்றி இராணுவ உதவிகளையும் தாராளமாக சோவியத் செய்தது. எரித்திரியாவைப் பயன்படுத்தி எத்தியோப்பியர்களுக்கு அழுத்தம் கொடுக்கும் வேலைதான் இது. இதனைத்தான் இந்தியாவும் பிற்காலத்தில் 'அண்ணன் காட்டிய வழியென' பின்பற்றியது. இவ் வளர்ச்சிகளை அவதானித்த எத்தியோப்பிய அரசு மேலும் மேலும் இராணுவ அடக்குமுறைகளைஅதிகரித்து ஈற்றில் எரித்திரியாவைத்தனது 14வது மாகாணமாக நேரடி ஆட்சியின் கீழ் கொண்டு வந்தது. இக்கால கட்டத்திலே ELF தள்ளாடத் தொடங்கிற்று. 'பாத்திரமறிந்து பிச்சையிடும் பாடம்' ருஷ்யா அங்கு கற்றது E. L. F. தலைமையால் ஒரு உறுதியான கட்டுப்பாடான இயக்கத்தைக் கட்டி பலவாறாகப் பிரிவுபட்ட மக்




னுக்கு 1967 முதல் பெருமளவு எரித்திரியர் அகதிகளாகச் செல்லத் தொடங்கினர். இவைகாரணம்பற்றி ELF இயக்கத்துள் பெரும் முரண்பாடு தேன்றியது. இதன் விளைவாக 1970 ஆண்டளவில் எரித்திரிய மக்கள் விடுதலை முன்னணி உருவாக்கப்பட்டது. ஒழுக்கமும், கட்டுப்பாடும் நிறைந்த போராளிகள் திட்டமிட்ட இராணுவ நடவடிக்கைகளால் மக்களை இணைக்கும் முயற்சிகளில் ஈடுபட்டும் E P. L. F மிகவேகமாக விடுதலை இயக்கமாகப் பரிணமித்தது. அதே சமயம் E. L F வோ ஒரு சிறிய இராணுவக் குழுவாக மாறியது. பலவேறு வகையிலும் இவ் இரு அமைப்புகளும் முரண்பட்டபோதும் 1976இன் பின் சோமாலியாவுக்கும், எத்தியோப்பியாவுக்கும் கடும்போர் மூண்டபோது ஒற்றுமைப்பட்டு எரித்திரியாவை மீட்கும் பணியில் ஈடுபட்டன. 1977இல் இவை எரித்திரியாவை மீட்டபோதும் இந்நிலை நீண்டகாலம் நிலைக்கவில்லை. இறுக்

மாக்சிய கடும் கோட்பாட்டாளராக தன்னை இனம் காட்டியகேணல்மெங்கிந்து கெய்லி மரியம் பதவிக்கு வந்தார். சோவியத் பாணியில் ஆட்சி நடாத்தினார். என்றாலும் எரித்திரியர் தன்னாட்சியை மட்டும் மறுத்தார். மீண்டும் வல்லரசுகட்கு சங்கீத கதிரை விளையாட நேரம் வந்தது. சோமாலியாவும் எத்தியோப்பியாவும் எல்லையில் இருந்த ஒகடான் பாலைவனப் பகுதி உனக்கா? எனக்கா? என சண்டைபோட வல்லரசுகள் பக்கம் மாறின. அமெரிக்கா சோமாலியா பக்கம்சாய, சோவியத் எத்தியோப்பியா பக்கம் சாய தமது எசமானர்களுக்காக மரியமும் சியாத் பாரேயும் மோதினர்.

''எத்தியோப்பிய புரட்சியை'' காப்பாற்ற சோவியத் 100கோடி டொலர் பெறுமதியான இராணுவ உதவிகளை 20 000 கியுபாத் துருப்பினரை அனுப்பியது. ஈற்றில் எத்தியோப்பியா வென்றது எனவே மீண்டும் புதிய சமன்

டத்தை மனம் தளராது தொடங்கிறது. அதையும் தடுக்க 1980களில் சூடானோடுஉடன்படிக்கை ஒன்றை செய்து மிகப் பெரும இராணுவ நடவடிக்கைகளை இப்பகுதிகளில் கேணல் மெங்கிந்து மேற்கொண்டார். இதனால் மேலும் இழப்புக்கள். சோவியத்தால் வழங்கப்பட்டபோர் விமானங்கள் எரித்திரியாவரல் தரைமட்டமாகின. மக்கள் பதுங்கு குழிகளில் வாழ்ந்தனர். இக்கால கட்டத்தில் போதாக்குறைக்கு, EPLF, ELF இயகக முரண்பாடுகளும் கூர்மையடைந்து உள்நாட்டு போர் போல இவை போரிட்டன. ELF ருசிய ஆலோசனைப்படி பேச்சுவார்த்தையில் கலந்துகொள்ள முற்பட EPLF இதனை நிராகரிக்க மோதல் தொடங்கியது.

இயக்கமோதல்கள் 1981-ம் ஆண்டளவிற்கு முடிவுக்கு வர வேறு இன்னல் மக்களைச் சூழ்ந்தது. அதுதான் ஆபிரிக்காவிற்கு உரித்தான பஞ்சம். கடும் வரட்சி காரணமாக எரித்திரிய மக்கள் 1984ஆம் ஆண்டும் இன்னொரு தடவையும் பெரும் பஞ்சத்திற்குட்பட்டனர். இக்கால கட்டங்களில் எரித்திரிய மக்கட்டு எவவித உதவியும் சென்றடையா வண்ணம் மிருகத்தனமான முறையால் எத்தியோப்பிய அரசு பார்த்துக்கொண்டது. ஆனால் விடுதலைத் தாகம் கொண்ட மக்கள் சோரவில்லை. உயிரிலும் மேலான சுதந்திரத்தைப்பெற அவர்கள் பின் நிற்கவில்லை.

விட்டனர். தமது கடும் மாக்சியநிலைப்பாட்டினை மெலஸ் செனாவி போலவே தாமும் கைவிட்டு உலகின் போக்கிற்கேற்ப சனநாயக பாரம்பரிய அடிப்படையில் அபிவிருத்தியை அடிப்படையாகக் கொண்டு E. P. L. F இயங்குகிறது. அதை உலகம் ஏற்கின்றது. இது இன்று. ஆனால் அன்று? சோவியத்வல்லரசு எரித்திரியாவில்நடந்தவிதம், அது அடித்த குட்டிக்கரணங்கள், ஈற்றில் அது வழுக்கிய விதம். அவ்வாறே 16 ஆண்டுகட்கு முன் எத்தியோப்பியாவைக் கைகழுவி சென்ற அமெரிக்கா பின் 'மாக்சிய முட்டாள்கள்'' என கேலிப் பட்டம் சூட்டிய அமெரிக்கா இன்றுதாமாகவே முன்வந்து பெருந்தன்மையுள்ள தனவான் போல நடக்கின்றமை நாம் மனம்கொள்ள வேண்டியவை. E.P.L.Fவளர்ச்சிப் போக்கினை ஆராய்ந்த ஆய்வாளர்கள் பலரில் பல்வேறு காலகட்டங்களில் அழிவின் விளிம்பிற்கு தள்ளப்பட்ட எரித்திரிய விடுதலைப் போராட்டம் - அதன் போராட்ட தலைமையான EPL.F இயக்கம் ஒவ்வொரு முறையும் முன்னைவிட வலுவோடு எழுந்தமைக்கு இரண்டே இரண்டு காரணங்களைச் சொல்கின்றனர் ஒன்று இராணுவ ரீதியாக E.P.L F போராட்டத்தால் எத்தியோப்பிய இராணுவம் பலவீனம் அடைந்தமை. இரண்டு எரித்திரிய மக்களின் அசைக்க முடியாத விடுதலை உணர்வின் வீச்சு.

# இரத்ததானமும் அதுபற்றிய அச்சங்களும் ஓர் மீள் ஆய்வு

சென்ற வார தொடர்ச்சி

இரத்தம் சுவாசப் பைகளிலிருந்து பிராண வாயுவை கலங்களுக்கும் அங்கிருந்து அனுசேப கழிவுப் பொருள்களை சுவாசப்பைக்கும் [$CO_2$] எடுத்துச் செல்லும் பெரும் பணியுடன், கலங்களை போசித்தல், கழிவகற்றல், பாதுகாத்தல், வெப்ப நிலைச்சீராக்கல் என பல்வேறு வகைப்பட்ட பணிகளையும் ஆற்றி வருகின்றது.

இரத்தத்தில் ஈமோகுளோபினின் அளவு குறைந்து குருதிச்சோகை வரும் ஒருவர் மூச்செடுப்பதில் சிரமம், களைப்பு, நெஞ்சுப்படபடப்பு என பல்வேறு வகையான குணங்குறிகளை வெளிப்படுத்துவர். குருதிச்சோகை மிகக் கடுமையான ஒரு நிலையில் அந்நோயாளிக்கு குருதியேற்றுதல் தவிர்க்கப்பட முடியாததாகும்.
ஒரு சராசரி மனிதனின் உடலின் 40 லீற்றருக்கும் சற்று மேலான திரவக் கூறில் 5 லீற்றர் (5000 மில். லீற்.) இரத்தம் என்பதை இப்போது நாம் அறிவோம். அவ்வாறாயின் இரத்த தானத்தின் போது ஒரு தடவையில் எவ்வளவு இரத்தம் தானம் செய்பவரிடமிருந்து பெறப்படுகிறது? ஆக 450 மில். லீற். மட்டுமே! எங்களிற் பெரும்பாலானோர் அச்சப்படுவதைப் போல இரத்தம் இழக்கப்பட்டால் ஈடு செய்ய முடியாத ஒன்றா? நிச்சயமாக அவ்வாறு இல்லை. உதாரணமாக நாங்கள் இழக்கின்ற இந்த 450 மில். லீற். இரத்தத்தின் திரவக் கூறான நீர் உடனடியாகவே ஒரு சில மணித்தியாலங்களுள் ஈடு செய்யப்பட்டுவிடும். இது நாங்கள் அளவுக்கதிகமாக நீரைக் குடித்தால் அது எவ்வாறு உடலின் நீர்ச் சமநிலை பேணும் கருவித் தொகுதிகளால் சிறுநீர், வியர்வையாக வெளியேற்றப்படுகின்றதோ அவ்வாறே இரத்த தானத்தின் போதான இழப்பு மேலதிக நீரை அருந்துவதன் மூலம் சிறுநீர், வியர்வையின் அளவைக் குறைப்பதன் மூலமும் ஈடு செய்யப்பட்டு விடுவது ஒரு மிக மிகச் சாதாரண உடற் தொழிற்பாடாகும்.

சிவஞானம்

அதேவேளை இரத்தத்தின் இழக்கப்பட்ட திண்மக் கூறுகளுக்கு என்ன நிகழ்கின்றது? செங்குருதிக் கலங்கள், வெண்குருதிக் கலங்கள் மற்றும் குருதிச் சிறுதட்டுக்கள் என்பனவும் புதரமூலக் கூறுகளும் கூட ஈடு செய்யப்பட்டு — சற்று மெதுவாக, ஒரு வார காலத்தினுள் மீள் உற்பத்தி செய்யப்பட்டு இரத்தத்தினுள் சேர்க்கப்பட்டு விடுவதும் சாதாரண ஒரு உடற்தொழிற்பாடேதான். இந்த இழப்புக்களை ஈடு செய்ய எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் மேலதிக, விசேட உணவுகளோ, மருந்துகளோ தேவையில்லை. எமது உடலின் சேமிப்பிலிருந்து தேவையான மூலகங்கள் எடுத்து இந்த இழக்கப்பட்ட திண்மக் கூறுகள் அதிலும் உயிர்க்கலங்கள் அவற்றின் உற்பத்தியிடங்களான எலும்பின் செவ்வென்பு மச்சைகளிலும் மற்றும் சில இழையங்களிலும் உற்பத்தி செய்யப்படுகின்றன, இதனால் இவற்றை உற்பத்தி செய்யும் இழையங்கள் எல்லாம் புத்துயிர்ப்பு அளிக்கப்பட்டு வேகமாகத் தொழிற்பட வைக்கப்படுகின்றன. எனவே இரத்த தானம் செய்ய வேண்டிய ஒரு சூழ்நிலை வரும்போது நாங்கள் அச்சப்பட நியாயமே இல்லை. ஏனெனில் இதற்காகச் சில அடிப்படைத் தகுதிகள் உள்ள மனிதரே தெரிவு செய்யப்படுவர். இரத்த தானத்தினால் கொடுப்பவரும் அதைப் பெறுபவரும் பாதிக்கப்படக் கூடிய எந்தவொரு சந்தர்ப்பத்திற்கும் வைத்தியர்கள் அனுமதிப்பதில்லை. அவ்வாறாயின் இரத்த தானம் செய்வோருக்கான அடிப்படைத்தகுதிகள் எவை?

இரத்த தானம் செய்யும் ஒருவர் கட்டாயமாக 50Kg இற்கு மேலாக உடல் நிறையும் 18 வயதிற்கு மேற்பட்டவராகவும் சில நோய்களால் தாக்கப்படாதவராயும் இருத்தல் வேண்டும். உதாரணமாக மலேரியா, பாலியல் தொற்று நோய்கள், ஈரல் அழர்ச்சி. இவ்வாறான நோயாளிகளைப் போலவேகர்ப்பிணிகளும், சிறு

(2ஆம் பக்கம் பார்க்க)

நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

# சிறிலங்காவில் பிரேமதாசா; ஓர் எதேச்சதிகாரத்தின் வீழ்ச்சி:




சிறிலங்கா ஜனாதிபதியின் மரணத்தை ஓர் எதேச்சதிகாரியின் வீழ்ச்சி என்று கொள்ளலாமா? இதற்கு தெற்கில் இருந்து கிடைக்கும் சில தகவல்கள் ஆம் என்ற பதிலை அளிக்கவே தூண்டுகின்றன.

தென்னிலங்கையில், ஜனாதிபதி பிரேமதாசா கொல்லப்பட்டதான செய்தி பரவிய போது பட்டாசுகொளுத்திக் கொண்டாடப்பட்டது. கொழும்பில் பிரேமதாசாவின் மரணத்தின் போது நின்ற ஒருவர் குறிப்பிட்டார், ''நத்தார் போல் பட்டாசுகள் கொளுத்தப்பட்டன'' என்று.

சிங்கள மக்கள் பொதுவாகவே மரணமடைந்தவர்களை வணங்கும் பண்பாடு கொண்டவர்கள் வீதியில் செல்லும். மரண ஊர்வலத்திற்கு அது யாருடையதாகிலும் எழுந்து நின்று வணக்கம் தெரிப்பவர்கள். அவர்களில் ஒரு பிரிவினர் தமது பண்பாட்டையும் மீறி பிரேமதாசாவின் மரணத்திற்காக பட்டாசுகொளுத்தி ஆரவாரித்தார்கள் என்றால், அவரும், பிலிப்பைன்ஸ் மார்கோஸ், ஈரான் ஷா, பாகிஸ்தான் சியா-உல்- ஹக் வரிசையில் சேர்த்துக் கொள்ளக்கூடியவர் என்ற முடிவிற்கே வர வேண்டியுள்ளது.

## அரசியல் யாப்பும் எதேச்சதிகாரமும்

சிறிலங்காவின் 'ஜனநாயக மரபில்' இவ்வாறாக ஓர் எதேச்சதிகாரி தோன்றுவதற்கு தனியாக, பிரேமதாசாவின் நடவடிக்கைகள் பட்டுமே காரணம் எனக்கொள்ளமுடியாது. 1978இல், ஜே ஆர் ஜெயவர்த்தனா, உருவாக்கிய புதிய அரசியலமைப்புச்சட்டமும் இதற்குப் பெரும் உதவி புரிந்துள்ளது. இவ் அரசியலமைப்பு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியை நோக்கி சகல அதிகாரங்களையும் குவியச் செய்தது ஜனாதிபதியை ஒரு சர்வ வல்லமை பொருந்திய எதேச்சதிகாரியாகமாற அரசியலமைப்பே வழிசெய்தது பிரேமதாசாவைப்பொறுத்து அரசியலமைப்பு வழங்கிய இக்கட்டற்ற நிறைவேற்று அதிகாரங்களும் சிறிலங்காவில்இதுவரைஆதிக்

வகுத்தது.

அரசியலமைப்பில் உள்ள வாய்ப்புக்களைப் பயன்படுத்தி இவ் ஏதேச்சதிகாரப் போக்கை முதல் முதலில் கடைப்பிடித்தவர் பிரேமதாசா எனக் கூறுவது முற்றிலும் பொருத்தப்பாடு உடைய தொன்றல்ல. சிறிலங்காவின் முதலாவது நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்ட ஜனாதிபதியும் இவ் அரசியல் அமைப்பை உருவாக்கியவருமான ஜே, ஆர். ஜெயவர்த்தனாவே இதனை தொடக்கி வைத்தவராவார். ஆனால் ஜனாதிபதி பிரேமதாசா அதற்கு முழுவடிவம்கொடுத்து தன்னை ஒரு எதேச்சதிகாரியாக நிறுவிக் கொண்டவராவார்.

ஜே.ஆர் ஜெயவர்தனா தனது ஆட்சிக் காலத்தில் ஐக்கிய தேசிய கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களிடம் இருந்து திகதியிடப்படாத இராஜினாமாக் கடிதங்கள் பெற்றுக் கொண்டார் எதிர்க்கட்சித் தலைவியான சிறிமாவோபண்டாரநாயக்காவின் குடியியல் உரிமையைப்பறித்தெடுத்தார் மேலும் பாராளுமன்றஆட்சிக் காலம் நீடிக்கப்பட்டமையும், ஆறாவதுதிருத்தச்சட்டத்தின் மூலம், தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்றத்தில் இருந்து வெளியேற்றப்பட்டமையும். மக்களின் அங்கீகாரமோ அன்றி பாராளுமன்ற அங்கீகாரமோ இன்றி இந்தியாவுடன் சமாதான உடன்படிக்கை ஒன்றை செய்துஇந்தியஇராணுவத்தை வரவழைத்தமை ஜே ஆர் ஜெயவர்த்தனாமேற்கொண்ட எதேச்சதிகார நடவடிக்கைகளின்ஆரம்பம்என்றேசொல்ல வேண்டும்.

## பிரேமதாசாவும் சிறிலங்காவும்

இதன் பரிணாம வளர்ச்சியும், நாட்டில் ஏற்பட்ட அரசியற் கொந்தளிப்புமே பிரேமதாசாவை ஓர் எதேச்சதிகாரியாக வளர்ச்சி அடையச் செய்தது ஆனால் ஜே. ஆர். ஜெயவர்த்தனா தனது நடவடிக்கைகளை சட்டபூர்வமான வரம்பிற்குள் வைத்து விளக்கங்கள்அளிக்கப் படக்கூடியதாகமேற்கொண்டவளை, பிரேமதாசாவின் நடவடிக்கைகள் சட்டத்திற்கு

இருந்தன.

அரசியலமைப்புச் சட்டத்தின் மூலம் கிடைத்த அதிகாரங்களைத் துஷ்பிரயோகம் செய்யும் அளவிற்கு அவர் ஆட்சி இருந்தது. அரசியல் யாப்பு மூலம் அவர் கையில் குவிந்த அதிகாரங்கள் பல்லாயிரக்கணக்கானோர் கொலைக்கும். அச்சுறுத்துவதற்கும் உரியதொன்றாக மாறியது.

திரு. பிரேமதாசா அவசர காலச் சட்டம் வழங்கிய அதிகாரங்களைப் பயன்படுத்தித் தனது அரசியல் எதிரிகளை



ஒடுக்குவதில் தீவிரமாக ஈடுபட்டார். பிரேமதாசா பதவிக்கு வந்த போது ஆட்சிக்கெதிராக கிளர்ச்சிசெய்தஜே. வி. பி. யினரை இரும்புக்கரம் கொண்டு நசுக்கினார். சுமார் 60,000க்குமேற்பட்ட சிங்கள இளைஞர்கள் அவரின் எதேச்சதிகார நடவடிக்கைகளால் அழிந்து போயினர். இவர்கள் பற்றிய தகவலே தெரியாதவாறு பிரமேதாசாவிடம் இருந்த கொலைகாரக் கும்பலானது அழித்து விட்டதாக அறிய முடிகிறது.

அத்தோடு ஜனநாயக ரீதியான எதிரிகளையும் அவர் அணுகிய விதம் ஜனநாயக விரோத வழிமுறைகளாகவே இருந்தது. பல உறுதிப்படுத்தப்பட முடியாத கொலைகளுக்கு பிரேமதாசாவே பொறுப்பு என எதிர்க்கட்சிகள்

## ஐ. தே. கவும் பிரேமாவும்

இந்நிலையானது எதிர்க்கட்சியினருடன் மட்டுமல்ல தனது தலைமையில் இருந்த ஐ.தே கட்சியினுள்ளும் அவ்வாறே இருந்தது. கட்சிக்குள் அவர் எதேச்சதிகாரமாக மேற்கொண்ட நடவடிக்கையில் கட்சிகளின் பிரிவினைக்கும் பிரேமதாசா இறந்த போது அடுத்து கட்சிக்கு சிறப்புப் பொருந்திய ஒரு தலைவரை தேடமுடியாத நிலையொன்றும் உருவாகியுள்ளது.

அடுத்ததாக அரசசார்பற்ற பத்திரிகைகள் மீது அவர் கடைப்பிடித்தஎதேச்சதிகாரப் போக்கானது சுயாதீனபத்திரிகையாளரை பெரிதும் மிரட்டியது.

எதிரானபோக்குடையபத்திரிகையாளர்மீதுவன்முறைகட்டவிழ்த்து விடப்பட்டது. கத்திகுத்தும். தாக்குதலும் பத்திரிகைகள்மீது மேற்கொண்ட பொருளாதார நெருக்குதல்களும் பத்திரிகையாளரை அச்சுறுத்தியது. பத்திரிகையாளர் இவரது எதேச்சதிகாரத்திற்கு அஞ்சினர். ஆனால் அவர் கொல்லப்பட்டபோது தான் வளர்த்த வன்முறைக்கு அவரே பலியானதாக அவைகூறின.

பிரேமதாசாவின் இவ் எதேச்சதிகாரப் போக்கானது

பாக கொழும்பிலுள்ள விமர்சகர்கள் இனப்பிரச்சினை தீர்வில் ஓரளவு நாட்டம் கொண்டுள்ள ஜனாதிபதி என்றும் இவர் காலத்திலேயே இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணப் படவேண்டும். இல்லையேல் பிரச்சினைக்கு அடுத்த ஜனாதிபதிகள் யாராலும் தீர்வு காணப்பட முடியாது என்றே விமர்சனம்செய்தனர்.

## தமிழர் போராட்டமும் ராணுவ தீர்வும்

இதற்கு திரு. பிரேமதாசா சிங்கள உயர் குலத்துடன் மோதி எவ்வாறு தனது ஆட்சியை நிலை நிறுத்தினாரோ அதேபோன்று பேரினவாத சக்திகளுடன் மோதி ஓரளவேனும் தமிழரின் பிரச்சினைக்கு தீர்வு காண முற்படுவார் எனவும் நம்பினர். ஆனால், பிரேமதாசா சிங்கள தேசத்திலும் கட்சிக்குள்ளும் ஏதேச்சதிகாரத்தை எவ்வாறு பயன்படுத்தினரோ அதே போன்றே தமிழர் விடயத்திலும் எதேச்சதிகாரப் போக்கையே கொண்டார்.

ஜனாதிபதி பிரேமதாசா இனப்பிரச்சினைக்கு எப்பொழுதும் அரசியல் தீர்விற்கே அரசு முதன்மை கொடுப்பதாக வற்புறுத்திவந்தபோதும் அவர் இராணுவத் தீர்வையே முனைப்பாக நாடி நின்றார். அதற்கான முயற்சியில்பெரும் பணத்தையும் நேரத்தையும் செலவிட்டார். அவர் காலத்தில் 45,000 அளவில் இருந்த சிறிலங்கா இராணுவத்தின் எண்ணிக்கை 90, 000 க்கும் மேல் சென்றது. இதேவேளை அவர் பதவியேற்ற போது சுமார் 800 கோடி ரூபாவாக இருந்த இராணுவச் செலவீடு கடந்த ஆண்டு 2,000 கோடி ரூபாவையும் தாண்டியது. சிங்கள சமூகமும் இராணுவமயமாகியது. இவர் காலத்தில் சிங்கள இராணுவம் மேற்கொண்ட இனப்படுகொலையும் கடந்த காலத்தை விடவும் உயர்ந்ததாகவே இருந்தது.

இனப்பிரச்சினை தொடர்பாக அவரது நான்கு வருட ஆட்சிக் காலத்தில் சர்வகட்சி மாநாடு, பாராளுமன்றத் தெரிவுக்குழு என இரு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்

ஐ. தே. கட்சி வகித்த பாத்திரமானது வெறும் போலித்தனமானதாகவே இருந்தது

பாராளுமன்றத் தெரிவுக் குழு இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்து பேச்சுவார்த்தைக்கென சுமார் ஒன்றரை வருடங்களுக்கு மேலாக கூடிக் கூடிக் கலைந்தாலும் ஐ தே. கட்சி ஒரு பார்வையாளரைப் போன்று காணப்பட்டதே ஒழிய தீர்வுத்திட்டம் எதையும் சமர்ப்பிக்கவோ. அன்றி முன்னேற்றகரமான மாறுதல்களை மேற்கொள்ளவோ உதவவில்லை.

மாறாக, அரசியலமைப்பு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிக்கு வழங்கிய அதிகாரங்களைக் கொண்டு மத்திய அரசின் பிடியை மேலும் இறுக்கிக் கொள்வதிலேயே பிரேமதாசா தீவிர கவனம் செலுத்தினார். தமிழர் தாயகமான வடக்கு-கிழக்கை பிரிக்கும் தனது அடிப்படை நோக்கத்தை தெரிவுக் குழுவின் சிபார்சு என்ற ரீதியில் துண்டாடுவதில் அக்கறை கொண்டிருந்த அவர் அடுத்து அறிமுகமாக்கிய பிரதேச செயலகங்கள் மாகாணங்களுக்கென இருந்த மிக அற்ப சொற்ப அதிகாரங்களை மேலும் அரித்தெடுக்கும் ஓர் அலகாகவும் மாகாணங்களை மேலும் சிறு நிர்வாக விரிவுகளாக்கும் திட்டமாகவும் இருந்தது.

எதேச்சதிகார ஆட்சியை சிறிலங்காவில் ஸ்தாபித்தார். இதில் அவர் சம்பாதித்துக் கொண்ட எதிரிகள் பலர். இதில் சிறிலங்காவின் எதிர்க்கட்சிகள், அவருடைய ஐக்கிய தேசியக் கட்சிக்குள் இருந்த அதிருப்தியாளர்கள், அவருடன் இணைந்து சிங்கள இளைஞர்களைப் படுகொலைசெய்ய துணைபோன உடுகம்பொல போன்ற உயர் பொலிஸ் இராணுவ அதிகாரிகள், என நீண்ட பட்டியலுடன், அவர் புரிந்த இனப்படுகொலைக்கு எதிரான தமிழர்களின் எதிர்ப்புணர்வு என்பன முக்கியமானவையாகும். இதில் அவரின் மரணத்திற்கு எது காரணமாக அமைந்தது எனத் தற்பொழுதுஇடமாகக்கூறமுடியாவிட்டாலும் ஓர் எதேச்சதிகார போக்குடைய ஜனாதிபதி வீழ்ச்சியடைந்து விட்டார்.

ஜெயராஜ்

ஆனால் அவரின் வீழ்ச்சியானது எதிர்பாராத வேகத்தில் எதிர்பாராத இடத்தில் ஏற்பட்டுவிட்டமையால்சிறிலங்கா அரசியலில் பெரும் அரசியல் வெற்றிடம் ஒன்றை ஏற்படுத்தியுள்ளது. பிரதியீடு இல்லாத நிலையில் ஏற்படுத்தப்பட்ட இவ்இடைவெளியானது நீண்ட காலத்திற்கு சிறிலங்கா அரசியலில் ஒரு ஸ்திரமின்மையை

சிறிலங்காவின் 'ஜனநாயக மரபில்' இவ்வாறாக ஓர் எதேச்சதிகாரி தோன்றுவதற்கு தனியாக, பிரேமதாசாவின் நடவடிக்கைகள் பட்டுமே காரணம் எனக்கொள்ளமுடியாது. 1978இல், ஜே. ஆர். ஜெயவர்த்தனா, உருவாக்கிய புதிய அரசியலமைப்புச் சட்டமும் இதற்குப் பெரும் உதவி புரிந்துள்ளது. இவ் அரசியலமைப்பு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியை நோக்கி சகல அதிகாரங்களையும் குவியச் செய்தது ஜனாதிபதியை ஒரு சர்வ வல்லமை பொருந்திய எதேச்சதிகாரியாகமாற அரசியலமைப்பே வழிசெய்தது பிரேமதாசாவைப்பொறுத்து அரசியலமைப்பு வழங்கிய இக்கட்டற்ற நிறைவேற்று அதிகாரங்களும் சிறிலங்காவில்இதுவரைஆதிக்கம் புரிந்த உயர் குலத்தின் மீதான வன்மமுமே அவரை எதேச்சதிகாரியாக மாறவழிதான உடன்படிக்கை ஒன்றை செய்துஇந்தியஇராணுவத்தை வரவழைத்தமை ஜே ஆர் ஜெயவர்த்தனாமேற்கொண்ட எதேச்சதிகார நடவடிக்கைகளின்ஆரம்பம்என்றேசொல்ல வேண்டும்.

### பிரேமதாசாவும் சிறிலங்காவும்

இதன் பரிணாம வளர்ச்சியும், நாட்டில் ஏற்பட்ட அரசியற் கொந்தளிப்புமே பிரேமதாசாவை ஓர் எதேச்சதிகாரியாக வளர்ச்சி அடையச் செய்தது ஆனால் ஜே. ஆர். ஜெயவர்த்தனா தனது நடவடிக்கைகளை சட்டபூர்வமான வரம்பிற்குள் வைத்து விளக்கங்கள்அளிக்கப்படக்கூடியதாகமேற்கொண்டவேளை, பிரேமதாசாவின் நடவடிக்கைகள் சட்டத்திற்கு அப்பாற்பட்டதாக, திரைமறைவு நிகழ்ச்சியாக மர்மங்கள் நிறைந்தவையாகவும் ஒடுக்குவதில் தீவிரமாக ஈடுபட்டார். பிரேமதாசா பதவிக்கு வந்த போது ஆட்சிக்கெதிராக கிளர்ச்சிசெய்தஜே. வி. பி. யினரை இரும்புக்கரம் கொண்டு நசுக்கினார். சுமார் 60,000க்குமேற்பட்ட சிங்கள இளைஞர்கள் அவரின் எதேச்சதிகார நடவடிக்கைகளால் அழிந்து போயினர். இவர்கள் பற்றிய தகவலே தெரியாதவாறு பிரமேதாசாவிடம் இருந்த கொலைகாரக் கும்பலானது அழித்து விட்டதாக அறிய முடிகிறது.

அத்தோடு ஜனநாயக ரீதியான எதிரிகளையும் அவர் அணுகிய விதம் ஜனநாயக விரோத வழிமுறைகளாகவே இருந்தது. பல உறுதிப்படுத்தப்பட முடியாத கொலைகளுக்கு பிரேமதாசாவே பொறுப்பு என எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டுவதற்கு ஏற்ற விதத்தில் அவரது எதேச்சதிகாரவலுப் பெற்று இருந்தது.

அடுத்ததாக அரசசார்பற்ற பத்திரிகைகள் மீது அவர் கடைப்பிடித்தஎதேச்சதிகாரப் போக்கானது சுயாதீனபத்திரிகையாளரை பெரிதும் மிரட்டியது.

எதிரானபோக்குடையபத்திரிகையாளர்மீதுவன்முறைகட்டவிழ்த்து விடப்பட்டது. கத்திகுத்தும், தாக்குதலும் பத்திரிகைகள்மீது மேற்கொண்ட பொருளாதார நெருக்குதலும் பத்திரிகையாளரை அச்சுறுத்தியது. பத்திரிகையாளர் இவரது எதேச்சதிகாரத்திற்கு அஞ்சினர். ஆனால் அவர் கொல்லப்பட்டபோது தான் வளர்த்த வன்முறைக்கு அவரே பலியானதாக அவைகூறின.

பிரேமதாசாவின் இவ் எதேச்சதிகாரப் போக்கானது இனப்பிரச்சினை விடயத்திலும் தொடர்ந்தது சில அரசியல் விமர்சகர்கள் குறிப்செலவிட்டார். அவர் காலத்தில் 45,000 அளவில் இருந்த சிறிலங்கா இராணுவத்தின் எண்ணிக்கை 90,000 க்கும் மேல் சென்றது. இதேவேளை அவர் பதவியேற்ற போது சுமார் 800 கோடி ரூபாவாக இருந்த இராணுவச் செலவீடு கடந்த ஆண்டு 2,000 கோடி ரூபாவையும் தாண்டியது. சிங்கள சமூகமும் இராணுவமயமாகியது. இவர் காலத்தில் சிங்கள இராணுவம் மேற்கொண்ட இனப்படுகொலையும் கடந்த காலத்தை விடவும் உயர்ந்ததாகவே இருந்தது.

இனப்பிரச்சினை தொடர்பாக அவரது நான்கு வருட ஆட்சிக் காலத்தில் சர்வகட்சி மாநாடு, பாராளுமன்றத் தெரிவுக்குழு என இரு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதாக அரசாங்கம் பிரசாரப்படுத்திய வேளையும் இவற்றின் முன் ஆட்சியில் இருந்த மாறாக, அரசியலமைப்பு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிக்கு வழங்கிய அதிகாரங்களைக் கொண்டு மத்திய அரசின் பிடியை மேலும் இறுக்கிக் கொள்வதிலேயே பிரேமதாசா தீவிர கவனம் செலுத்தினார். தமிழர் தாயகமான வடக்கு-கிழக்கை பிரிக்கும் தனது அடிப்படை நோக்கத்தை தெரிவுக் குழுவின் சிபார்சு என்ற ரீதியில் துண்டாடுவதில் அக்கறை கொண்டிருந்த அவர் அடுத்து அறிமுகமாக்கிய பிரதேச செயலகங்கள் மாகாணங்களுக்கென இருந்த மிக அற்ப சொற்ப அதிகாரங்களை மேலும் அரித்தெடுக்கும் ஓர் அலகாகவும் மாகாணங்களை மேலும் சிறு நிர்வாக விரிவுகளாக்கும் திட்டமாகவும் இருந்தது.

சிறிலங்கா ஜனாதிபதி தனக்கு விசுவாசமான ஓர் அதிகாரிகளின் குழுவுடன் ஓர் மரணத்திற்கு எது காரணமாக அமைந்தது எனத் தற்பொழுதுதிடமாகக்கூறமுடியாவிட்டாலும் ஓர் எதேச்சதிகார போக்குடைய ஜனாதிபதி வீழ்ச்சியடைந்து விட்டார்.

## ஜெயராஜ்

ஆனால் அவரின் வீழ்ச்சியானது எதிர்பாராத வேகத்தில் எதிர்பாராத இடத்தில் ஏற்பட்டுவிட்டமையால்சிறிலங்கா அரசியலில் பெரும் அரசியல் வெற்றிடம் ஒன்றை ஏற்படுத்தியுள்ளது. பிரதியீடு இல்லாத நிலையில் ஏற்படுத்தப்பட்ட இவ் இடைவெளியானது நீண்ட காலத்திற்கு சிறிலங்கா அரசியலில் ஒரு ஸ்திரமின்மையை ஏற்படுத்தப்போவதை இலகுவில் தடுத்துவிடக்கூடிய தொன்றல்ல.

# அழிவை நோக்கிய பாதையில் இந்து சாம்ராஜ்யம்

இறைவன் ஒருவனே; அவனே பரப்பிரமம். பிரமம்உலகிலும்உலகிலுள்ள உயிர்களிலும் ஒவ்வொரு பொருளிலும் காணப்படுகிறது. பிரமமே எல்லாம். அது வடிவமற்றது. எல்லா வடிவமுமானது. பிரமத்தினுள்ளே அனைத்தும் அடங்குகின்றது. அதுவே அனைத்தினையும் இயக்குகின்றது. பிரமமே பிரபஞ்சத்தையும் ஆன்மாவையும் படைக்கிறது; ஆன்மாவும் பிரமமும் ஒன்றே; இறுதியில் ஆன்மா உடல் கூட்டிலிருந்து விடுபட்டு தன் பிறப்பிடமான பிரமத்தை அடைய வேண்டும்.

உபநிடதம்,

அயோத்தியில் பாபரி மசூதி கோபுரங்கள் சரிந்து விழுந்த பொழுது நவீன இந்துமத சீர்திருத்தத்தின் தந்தையான சிறிராம், மோகன்ராய் உயிரோடு இருந்திருந்தால் நிச்சயமாக இடிந்து போயிருப்பார்.

ஏனெனில், திரு. சிறிராம் மோகன்ராயின் ஒரே கடவுள் தத்துவமும்அவருடைய ஒன்றுபட்ட இந்தியா என்ற விருப்பமும், இடிந்து சரிந்து விழுந்த மசூதியின் அடியில் அன்றுதான் இறுதியாகப் புதைந்து போனது.

இந்தியா, ஒன்றுபட்டதொரு தேசத்துக்குரிய வடிவத்தை முற்றுமுழுதாக கொண்டதொருநாடுஇல்லை. பல்வேறு கலாசாரங்களை கொண்ட வெவ்வேறுஇனங்களைஇணைத்து வைத்திருக்கும் ஓர் பலவீனமான அமைப்பு. இவ்வினங்கள் சேர்ந்திருப்பதற்கு வேண்டிய எந்தவொரு அடிப்படை அம்சமும்இங்குஇல்லை.

சோவியத்ஒன்றியத்தைப் போல சில வருடங்களில் கலைந்து போகக்கூடிய கூட்டமைப்புதான் இந்தியாவும். வேண்டுமாயின், இராணுவ அழுத்தங்கள் மூலம் மேலும் சில வருடங்களுக்கு இந்த அமைப்பை இழுத்து வைத்திருக்கலாம்.

இதைவிடுத்து, இந்தியாவின் மதவேறுபாடுகளை பார்த்தால்விசித்திரமான தோற்றப்பாடை சந்திக்கலாம். உண்மைதான். அது உள்ளிருந்து கொண்டே வருத்தும் புண் போன்றது. தீர்வு எதுவுமே இல்லாத சிக்கல். ஒரு எரிமலையைப் போல, எப்போது நெருப்பை கக்கும் என்று எவருக்குமே தெரியாத புதிர்.

இந்திய நாட்டின் பல்வேறு மாநிலங்களிலும் வாழும் ஒவ்வொரு மனிதனும் ஏதோவொரு மதம் சார்ந்த கருத்துலகத்தால் வனயப்பட்டே இருக்கிறான். பிறவியிலேயே தோன்றிய அந்த வலயத்தை விட்டு இலகுவில் அவன் வெளியே வருவதில்லை. இத்தகைய இந்திய மனிதனொருவனே அங்கு தோன்றும் மதக்கலவரங்களுக்கு காரணமாகிறான்.

இந்திய வரலாற்றில் மதவேறுபாடுகளை கடந்து இந்திய நலனுக்காக மக்களை ஒன்றிணைக்க பல தலைவர்கள் பல்வேறு காலகட்டங்களில் முயன்றார்கள். அதத கையவர்களில் திரு. சிறிராம் மோகன்ராய் அவர்கள் முதன்மையானவராக இருக்கிறார்.

ஆங்கில ஏகாதிபத்தியத்திடமிருந்து, இந்திய நாட்டை விடுவிப்பதற்கான போராட்டத்திற்காக மக்களை அடிப்படையின் ஒன்றிணைக்க வேண்டிய தேவை எழுந்த போதே மோகன்ராயின் 'பிரம தத்துவமும்' தோற்றம் பெற்றது. இந்திய நாட்டின் பெருமளவு சனத்தொகையினரை ஒன்று திரட்டுவதற்கு அவர் கண்ட வழிதான் இந்த பிரம தத்துவம்.

மனிதர்கள் அடிப்படையில் ஒன்றிணைவதற்கு அவர்களுக்கு இடையேஉள்ள மதவேறுபாடுகளை களையவேண்டும்; அதே நேரம் மதங்களுக்கிடையே இருக்கும் அடிப்படை ஒருமைப்பாடு ஒன்றைத்தேர்ந்தெடுத்து, அதனை மனித ஒற்றுமைக்காக பயன்படுத்த வேண்டும் என ராய் அவர்கள் முயன்றார்.

இதன்முடிவாக, இந்துமதத்தின் கூறுகளான சைவம், வைணவம், சாக்யம், பௌத்தம் ஆகிய சமயங்கள் பிரம தத்துவத்தை ஏற்றுக் கொள்வதை ராய் அவர்கள் கண்டு கொண்டார்.

'கடவுள் ஒன்றே, அனுபிரமமே. பிரமமே பிரபஞ்சத்தையும், ஆன்மாவையும் படைக்கின்றது. பிரமமே எல்லாம்; அதற்குள் அனைத்தும்அடங்குகின்றது' என்னும் உபநிடதத்தத்துவத்தை ராய் ஆயுதமாகஎடுத்தார் இதுவே, இந்திய மக்களின் ஒற்றுமைக்கும், தொடர்ந்து இந்தியாவை ஒன்றிணைத்து வைப்பதற்கான வழி என்றும் திரு. ராய் நம்பினார்.

திரு. ராய் அவர்களின் ஒரே கடவுள் சிந்தனையை இஸ்லாமியர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. அவருடையபிரம தத்துவத்தையும் அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. கிறிஸ்தவர்களும் திரு ராயை ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் அந்நேரத்தில் அவர்கள்ஓர் பெரும் சகதியாக இருக்கவில்லை. ஆயினும் இந்திய சனத்தொகையில் பெருமளவினரை அணிதிரட்டக்கூடிய இந்துமதமூலக் கூறுகளே ராயின் இலக்காக இருந்தது.

திரு. மோகன்ராயின் அரசியல் நோக்கங்களைத் தவிர்த்துப் பார்த்தாலும், அவருடைய புதியமதம் புரட்சிகரமான பல முற்போக்கு அம்சங்களைக் கொண்டிருந்தது. வட இந்தியர்களால் பெருமளவில் விரும்பப்படும்கடவுளான சிறிராமரின் பெயரை தன்னுடைய பெயரின் முற்பகுதியில் கொண்ட திரு. ராய் உருவ வழிபாட்டை எதிர்த்தார். கடவுளுக்கு வடிவமில்லை என்பது அவர் கருத்தாக இருந்தது.

இந்து மதத்தில் இருந்த பிற்போக்கான கொடிய மூடவழக்கங்கள் பலவற்றை எதிர்த்து இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்பு திரு. ராய் அவர்கள் போர்க்கோலமெடுத்தார். வர்ண வேறுபாடுகள், உடன்கட்டை ஏறும் வழமை ஆகியவற்றுக்கெதிராக கடுமையாக குரல் கொடுத்தார்.

திரு. சிறிராம் மோகன்ராயின் மறைவின் பின்பு அவரின் புதிய தத்துவத்தை வித்தியா வாகீசர், தாகூர், குமரதுத்தா, கேதுப் தயானந்தர் போன்ற இந்தியத் தலைவர்கள் வழிநடாத்தி வந்தார்கள். இந்து மதத்தின் பல மூடவழக்கங்கள் இவர்களின் காலங்களில் மறைந்தன. தீண்டாமை ஒழிப்பு, விதவை மறுமணம் போன்ற முற்போக்கான மாற்றங்களுக்கு இவர்கள் காரணமாக இருந்தார்கள் இந்து மதத்தின் இப்புதிய சீர்திருத்தக்கொள்கை காந்தியின் காலம்வரை வந்தது. மகாத்மா காந்தி அவர்கள் தனது அரசியல் நோக்கங்களுக்காக இத்தத்துவத்தை பின்பற்றி இருக்கலாம். காந்தியின் காலத்தின் பின்பு இப்புதிய தத்துவம் வாழ்ந்ததா என்பது சந்தேகத்துக்குரியதாகவே உள்ளது.

சரி, சுவையற்ற இந்தப் பழைய கதையைவிட்டு தற்போதைய இந்திய மதஅரசியல் உலகிற்கு வந்தால் எம்மால் விளங்கிக் கொள்ள முடியாத அதிசயமான விடயங்கள் பலவற்றை நாம் சந்திப்போம்.

திரு. ராய்அவர்கள் வாழ்ந்த இருநூறு வருடங்களுக்கு முன்பிருந்த காலத்தையும் கடந்து அதற்கு பின்னால் இந்திய தேசத்தவர்கள் சென்று விட்டதை நாம் காணலாம்.

தற்போதைய சூழ்நிலையை 'இந்துமத விழிப்புணர்வு காலம்' என வர்ணிக்கும் புதிய இந்துஸ்தான் தலைவர்கள் இந்தியாவை 200 வருடங்களுக்கு பின்னோக்கி இழுத்துச் செல்வதை அந்த நாட்டவர்கள் உணரத் தவறுகிறார்கள் இதில் பாரதீய ஜனதா கட்சியினர் மட்டும் தான் குற்றச்சாட்டுக்குஉரியவர்கள் அல்ல. காங்கிரசாரும் குற்றவாளிகள்தான். இதில் தொலைக்காட்சி சேவையில் இராமாயணத் தொடர் மகாபாரதத்தொடர் என விஸ்ணுஅவதாரங்களுக்கு நீண்ட நேரத்தை ஒதுக்கிய ராஜிவ் காலத்து காங்கிரஸ் ஆட்சியும் குற்றவாளிகளாகவே உள்ளது

இந்த அரசியற் கட்சிகளிடையே இந்துக்களின் வாக்குகளுக்காக சிறி ராமரை யார் அதிகமாகப் பயன்படுத்தலாம் என்பதை தவிர வேறெந்த வேறுபாடும் இல்லை. இருக்கவும். இல்லை.

திரு. மோகன்ராய் போன்றவர்கள் இந்திய மக்களின் மூடவழக்கங்கள் களையப்பட வேண்டுமென விரும்பினார்கள்; ஆனால் இன்றைய இந்தியத்தலைவர்கள் அந்த மூடநம்பிக்கைகளின் மேல் தங்கள் சாம்ராஜ்யங்களை கட்டி எழுப்ப நினைக்கிறார்கள். இதனால்தான் தொலைக் காட்சியில்ராமராகவும் கிருஸ்ணராகவும் நடித்த நடிகர்கள் தங்கள் வேடங்களைகளையாமல் தேர்தல் மேடைகளில் ஏறினார்கள் இந்தக் குற்றச் சாட்டுகளிலிருந்து ஜனதா தளத்தினரும் தப்பமுடியாது ஏனெனில் அவர்களின் தலைவர்களில் ஒருவரான என். ரி. ராமராவ் கிருஸ்ண அவதாரம் எடுத்துத்தான் இறுதியாக நடந்த தேர்தலில் தோற்றுப்போனார்.

இவை எல்லாவற்றினதும் ஒட்டுமொத்தமான விளைவுதான் இன்றைய இந்தியாவின் தோற்றம்.

இதில் மிகவும்வியப்புக்குரியது என்னவென்றால் சென்ற வருடம் பாரதீய ஜனதா கட்சியின் ஒருபிரிவினர் உடன் கட்டை ஏறும் வழக்கத்துக்கு அரசு அனுமதிக்க வேண்டும் என்று ஒரு போராட்டத்தை நடத்தியது ஆகும். 200 வருடங்களுக்கு முன்பு சிறிராம் மோகன் ராய் போன்றோர், பாமரமக்களுக்கு நடுவே உடன் கட்டை ஏறும் வழக்கத்தை ஒழிக்கப் போராடினார்கள். ஆனால் இன்று அதுவும் 21ஆம் நூற்றாண்டுக்கு இந்தியாவை அழைத்துச் செல்லப்போகும் பா. ஜ கட்சியினரோபடித்தஅறிவுநிறைந்த சமூகத்திற்குள் உடன் கட்டை ஏறும் வழமையை மீண்டும் கொண்டுவர பாடுபடுகிறார்கள்

இந்த நிகழ்வுகள் எப்படியும் போகட்டும். ஆனால், அடுத்து

[6ஆம் பக்கம் பார்க்க]

## குலோத்துங்கன்

# லலித் குடும்பத்தினர் சாட்சியமளிக்க தயக்கம்

(கொழும்பு)

லலித் அத்துலத்முதலி கொலையுண்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தின் போது லலித்தின் மெய்ப்பாதுகாவலர்கள் கொலையாளியை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்தனரா என்பது தொடர்பாக சர்ச்சை உருவாகியுள்ளது.

லலித் தனது பாதுகாப்பிற்காக துப்பாக்கிகள் தருமாறு அரசைக் கோரியிருந்தாராயினும், கட்சித் தலைவர்களின் பாதுகாப்பிற்காக ஆயுதங்கள் வழங்கப்படுவதற்கு உரித்துடையவர்கள் அல்ல என்றே பாதுகாப்பு அமைச்சினால் கூறப்பட்டிருந்தது. அதன் பின்னர் ஈ.பி.டி.பியினருக்கு ஆயுதம் வழங்கப்பட்டிருப்பதை சுட்டிக்காட்டியதை அடுத்து அவருக்கு ஒரு றிவோல்வர் மட்டுமே வைத்திருப்பதற்கு அரசு அனுமதித்து இருந்தது.

இதன் காரணமாக சட்ட விரோதமான வகையில் சில துப்பாக்கிகளை லலித் தனது பாதுகாப்பிற்காக வைத்திருந்தாராம். ஆனால் இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தின் போது மெய்ப்பாதுகாவலர் பதில் தாக்குதலை நடத்தினர் என்பதை ஜனநாயக ஐக்கியதேசிய முன்னணியினர் ஒப்புக்கொண்டால் சட்டவிரோதமாக துப்பாக்கி வைத்திருந்தமையையும், அது தொடர்பான கிரிமினல் குற்றச்சாட்டுகளையும் ஏற்க வேண்டி வரும். இந்தச் சூழ்நிலையில் பொலிஸாரின் முன்பாக ஜ ஐ. தே. முயினர் சில விடயங்களை மறைக்க வேண்டியிருக்கும்.

இது தொடர்பாக குற்றப் புலனாய்வுப் பிரிவு பொலிஸ் அதிகாரி அமரசேன ராஜபக்ஸவிடம் சுட்டிக்காட்டப்பட்ட போது சம்பவம் பற்றிய உண்மை விபரங்களை விபரித்தால் சட்டமா அதிபரிடம் வழக்குத் தாக்கல்செய்யவேண்டாமென தான் கோரமுடியும் என்று கூறியுள்ளார். இந்தச் சூழ்நிலையில் தான் லலித் அத்துலத்முதலியின் குடும்பத்தினரும், ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியினரும் ஸ்கொட்லன்ட்யார்ட் புலனாய்வுக் குழுவினருக்கு முன்பு சாட்சியமளிக்க இலங்கையிலுள்ள பிரித்தானிய தூதுவராலயத்தின் உதவியை நாடியுள்ளனர்.


ஸ்ரீதர் திரையரங்கில்

**In the Line of Duty**


தினசரி மாலை 4 மணி, 6 மணி
சனி, ஞாயிறு தினங்களில்
காலை 10.30 மாலை 4 மணி, 6 மணி
[சி-6575]


அளவெட்டி வடக்கு

## ஐக்கிய நாணய சங்க விசேட பொதுக் கூட்டம்

மேற்படி சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் 9-5-93 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கும்பளாவளைப் பிள்ளையார் கோவில் மடத்தில் திரு பண்டிதர் க. நாகலிங்கம் அவர்கள் தலைமையில் ஆரம்பமாகி நடைபெறும். அத்தருணம் சமாச வெளிக்கள உத்தியோகத்தர் வருகை தர உள்ளார். வேறு பல விடயங்கள் ஆராய இருப்பதால் அங்கத்தவர்கள் யாவரும் தவறாது சமுகம் அளிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

இப்படிக்கு
[4834] வை. செல்லையா
அ. வ. ஐ. நா. ச. தனாதிகாரி

UNIKCO
COMPUTER


## பரீட்சை பிற்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

இம்மாதம் 8 ஆம் 9 ஆம் திகதிகளில் நடைபெறவிருந்த தேசிய கல்வி நிறுவாகத்தின் கல்வி டிப்ளோமாப் பகுதி 1 இற்கான பரீட்சை இம்மாதம் 29 ஆம், 30 ஆம் திகதிகளுக்கு பின்போடப்பட்டுள்ளது.

கல்விக்கான விடுமுறையில் நிற்கும் ஆசிரிய மாணவர்கள் தங்கள் கடமைகளை எதிர்வரும் 10 ஆம் திகதியில் ஏற்குமாறும் மீண்டும் 20 ஆம் திகதி தொடக்கம் 30 ஆம் திகதி வரை கல்வி விடுமுறை இவர்களுக்கு வழங்கப்படும் எனவும் யாழ். பிரதேச கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் தெரிவித்துள்ளார்.

[பா]

## கருத்தரங்கு

ஆண்டு 11 முன்னோடிப் பரீட்சைக்கான செய்முறைத் தேர்வு – 1993 தொடர்பாக எதிர்வரும் திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு கல்வித் திணைக்கள முகாமைத்துவ மண்டபத்தில் கருத்தரங்கு நடைபெறும். இக் கருத்தரங்கில் ஆரம்பபிரிவு இடைநிலைப்பிரிவு சேவைக்கால ஆலோசகர் [விஞ்ஞானம்] அனைவரும் தவறாது கலந்து மேற்படி செய்முறைத் தேர்வுக்கான கருத்துக்களை வழங்குமாறு கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

## அழிவை

வரும் வருடங்களில்-பா.ஜ.கட்சியினரே அரசபீடத்தில் முடிசூடிக்கொள்வார்கள் என்பதில் சந்தேகம் கொள்வதில் அர்த்தமில்லை. பாரதீய ஜனதாக் கட்சியினரின் ஆளுகையில் இந்தியா எங்கு செல்லப் போகிறது என்பதுதான் இப்போது எழுந்து நிற்கும் கேள்வி!

மதக்கலவரங்களால் இந்தியா சிதறிப்போகும் என்பது

# வடபகுதி வந்த தமிழர் வவுனியாவில் தடுப்பு

(வவுனியா)

தென்பகுதியிலிருந்து அச்சம் காரணமாகவெளியேறி யாழ்ப்பாணம் நோக்கி வந்த 5000 ற்கும் மேற்பட்ட தமிழர்கள் வவுனியாவில் இராணுவத்தால் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிககின்றன.

லலித் அத்துலத் முதலி மற்றும் சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா ஆகியோரின் கொலைகளைத் தொடர்ந்து தென்பகுதியில் பெரும் பதற்றம் நிலவுவதுடன் தாக்குதலகளுக்கு சில சிங்கள அரசியல்வாதிகள் தூபமிட்டு வருவதும் தெரிந்ததே.

இதைத் தொடர்ந்து கொழும்பு மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் தங்கியிருந்த பல ஆயிரக்கணக்கான தமிழர்கள் அச்சம் காரணமாக அங்கிருந்து வெளியேறி யாழ். குடா நோக்கி வந்துகொண்டிருப்பதாக செய்திகள் வெளிவந்ததும் தெரிந்ததே.

தற்போது இது தொடர்பாக கிடைத்த இறுதித் தகவல்களின்படி வவுனியா வரை வந்த இத் தமிழ் மக்களை யாழ்ப்பாணம் செல்ல சிறிலங்கா இராணுவத்தினர் அனுமதிக்கவில்லை எனவும் இவர்களை வவுனியா நகரங்களை அண்டிய பகுதிகளில் உள்ள பாடசாலைகளில் தங்க வைத்துள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதனால் இவர்கள் வேறு வழியின்றி அங்கேயே தங்கியிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

## ஜனாதிபதியைதெரிவுசெய்ய இன்று பாராளுமன்றம் கூடும்

(கொழும்பு)

சிறிலங்காவின் புதிய ஜனாதிபதியை தெரிந்தெடுப்பதற்காக இன்று பாராளுமன்றம் கூடுகிறது. சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா குண்டுவெடிப்பில் கொல்லப்பட்டதையடுத்து பதில் ஜனாதிபதியாக நியமிக்கப்பட்ட டி. பி. விஜயதுங்க ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியின் அபேட்சகராக நிறுத்தப்பட்டுள்ளார். எதிர்க் கட்சிகள் எவையும் இதுவரை ஒரு வேட்பாளரையும் நிறுத்தவில்லை.

இன்று கூடவிருக்கும்பாராளுமன்றக் கூட்டத்தில் எதிர்க் கட்சிவேட்பாளர்எவரும் நிறுத்தப்படாவிட்டால் டி பி. விஜயதுங்கா சிறிலங்கா ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்படுவார்

இன்று தெரிவுசெய்யப்படும் ஜனாதிபதி 1994 ஜனவரி 2வரை பதவிவகிக்க முடியும்.

## இரண்டு பொதுமக்கள் இராணுவத்தால் கைது

மட்டக்களப்பில் இருபொது மக்கள் சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டனர்.

கடந்த 28-ம் திகதி மாலை 3 மணியளவில் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள ஆண்டான்குள காட்டுப் பகுதியில் தேனெடுக்கச் சென்றபோது அதே இடத்தைச் சேர்ந்த 5 பிள்ளைகளின் தந்தையான கந்தையா மாரிமுத்து (வயது 52) மற்றும் ஆறு பிள்ளைகளின் தந்தையான பஞ்சாயுதம் தேவநாயகம் (வயது 24) ஆகியோரே இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களாவர்.

## திருமலை மாவட்டத்தில் குடும்பஸ்தர் கைது

(திருமலை)

திருமலை மாவட்டத்தில் மூதூர் பிரதேசத்தில் உள்ள நாவலடி சிறிலங்கா இராணுவத்தினர் குடும்பஸ்தர் ஒருவரைக் கைது செய்துள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை மூதூர் சேனையூரைச் சேர்ந்த 5 பிள்ளைகளின் தந்தையான குணசேகரம் (வயது35) என்பவரே இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டவராவார்.

## ரெலோ தேசவிரோதிகள் கிராம மக்கள் மீது தாக்குதல்

(மட்டக்களப்பு)

சிறிலங்கா இராணுவத்தினரும் ரெலோ தேசததுரோகிகளும் இணைந்து மட்டக்களப்பு மாவட்டத்தின் சில பகுதிகளைச் சுற்றி வளைத்ததுடன் அப்பகுதி மக்களில் பலரைத்தாக்கியதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

மட்டக்களப்பிலுள்ள தியாவட்டவான், மயிலன் கரச்சை ஆகிய இடங்களே சிறிலங்கா இராணுவத்தினராலும், ரெலோ துரோகிகளாலும் கடந்த செவ்வாய்க்கிழமை சுற்றி வளைக்கப்பட்டது

இப்பகுதிகளைச்சுற்றி வளைத்த இவர்கள் அங்கு வாழ்ந்து வந்த ஆண்கள். பெண்கள், சிறுவர்கள் எனப் பல தரப்பட்டோரையும்பலமாகத் தாக்கியதுடன் அவர்களுக்கு பல இன்னல்களையும் விளைவித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

## பிரேமாவின் அஞ்சலிக்கு ஜே. ஆர். வரவில்லை

(கொழும்பு]

நீண்டகாலம் அரசியலில் தனது சகாவாக செயற்பட்டு வந்த பிரேமதாசா எப்போதும் கருத்துக்களை வெளிப்படையாக முன்வைப்பவர் என்றும், எந்தச் சந்தர்ப்பத்திலும் தனது கருத்துக்களை எதிர்த்தவரல்ல என்றும் முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா நேற்றுவிடுத்த இரங்கலுரையில் குறிப்பிட்டார்.

இதேவேளை பிரேமதாசாவின் இறுதி அஞ்சலி நிகழ்வில் முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன கலந்துகொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## புலிகளின் தாக்குதலுக்கு ஒரு சிப்பாய் படுகாயம்

[வவுனியா]

வவுனியாவிலுள்ள நொச்சிமோட்டை சிறிலங்கா இரா... டைக் காவலரண்களிற்கு முன்பாக வேலை செய்துகொண்டிருந்த இராணுவத்தினர்

## வெளிநாட்டோரை தடுக்க பிரான்சில் புதிய சட்டம்

பிரான்சினுள் வெளிநாட்டவர்கள் சென்று குடியேறுவதைக் கட்டுப்படுத்தும் முகமாக பல புதிய சட்டங்களை வலதுசாரி அரசு வரைந்துள்ளது. வெளிநாட்டவர்களை மணம்செய்வது சட்டவிரோதமாக குடியேறியோரை வெளியேற்றுதல், மேன்முறையீட்டு உரிமை ரத்து, உறவினர்களை அழைக்கத்தடை, அரசியல்தஞ்சம் கோரும் காரணங்களைக் கடுமையாக்கல் என்பன அவற்றுள் சிலவாகும்.


## பாதுகாப்பு அமைச்சிடம் காமினி ஆயுதம் கேட்கிறார்

லலித் கொல்லப்பட்ட சம்பவத்திற்கு பின்னர் தேர்தல் வேறு வேட்பாளருக்கும்ரி-56 ரக துப்பாக்கியுடன் கூடிய

## ஐக்கிய நாணய சங்க விசேட பொதுக் கூட்டம்

மேற்படி சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் 9-5-93 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கும்பளாவளைப் பிள்ளையார் கோவில் மடத்தில் திரு பண்டிதர் க. நாக லிங்கம் அவர்கள் தலைமையில் ஆரம்பமாகி நடைபெறும். அத்தருணம் சமாச வெளிக்கள உத்தியோகத்தர் வருகை தர உள்ளார். வேறு பல விடயங்கள் ஆராய இருப்பதால் அங்கத்தவர்கள் யாவரும் தவறாது சமுகம் அளிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

இப்படிக்கு
[4834] **வை. செல்லையா**
அ. வ. ஐ. நா. ச. தனாதிகாரி



## UNIKCO COMPUTER CENTRE

* dBASE III PLUS
* LOTUS 1-2-3
* WORD PROCESSING (WORDSTAR Rel 5·5)

புதிய பிரிவுகள் ஆரம்பம்

08-05-93 (சனி, ஞாயிறு)
11-05-93 (செவ்வாய், வியாழன்)

முக்கிய குறிப்பு :

* எமது நிறுவனத்தில் கல்வி கற்பவர்களுக்கு இலவசமாக US-DOS வகுப்புக்களும் நடைபெறுகின்றன.
* காலை 10.00மணி தொடக்கம் மாலை 6 30மணி வரை உங்கள் வசதிக்கேற்ப செய்முறைப் பயிற்சிகளை செய்துகொள்ளலாம்.
* நூல் நிலைய வசதியும் செய்யப்பட்டுள்ளது

மேலதிக விபரங்களுக்கு:

37, *CLOCK TOWER ROAD*
*JAFFNA*
(வெலிங்டன் சந்திக்கு அருகாமையில்)
(சி-6581)

## உதயன்ஸ் வோச் வேக்ஸ் சொப்

பலாலி வீதி, ஆலடிச் சந்தியில் அமைந்திருந்த உதயன் மணிக்கூட்டுத் திருத்தகம் 5-5-1993 தொடக்கம் பருத்தித்துறை வீதி, ஆரியகுளம் சந்தியில் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை வாடிக்கையாளர்களுக்கு மிகுந்த மன மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

உரிமையாளர்
100, பருத்தித்துறை வீதி, **சு. உதயகுமார்**
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம். (சி, 6578)



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31-ம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993-ம் ஆண்டு மே மாதம் 07-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.


குழுவினருக்கு முன்பு சாட்சியமளிக்க இலங்கையிலுள்ள பிரித்தானிய தூதுவராலயத்தின் உதவியை நாடியுள்ளனர்.

## அழிவை

வரும் வருடங்களில்-பா.ஜ.கட்சியினரே அரசபீடத்தில் முடிசூடிக்கொள்வார்கள் என்பதில் சந்தேகம் கொள்வதில் அர்த்தமில்லை. பாரதீய ஜனதாக் கட்சியினரின் ஆளுகையில் இந்தியா எங்கு செல்லப் போகிறது என்பதுதான் இப்போது எழுந்து நிற்கும் கேள்வி!

மதக்கலவரங்களால் இந்தியா சிதறிப்போகும் என்பது கற்பனைக்குரியது. இந்திய தேசத்துள் சிறுபான்மையினராக சிதறிப்போயிருக்கும் முஸ்லிம்களால் இந்திய ஒருமைப்பாட்டுக்கு ஆபத்துவரப்போவதில்லை. (காஸ்மீர் மாநிலம் இதில் விதிவிலக்காக இருக்கலாம். அந்த மாநிலத்தின் பிரச்சினைகளுக்கு முஸ்லிம் மதத்தவர்கள் என்பதைவிட வேறு பல காரணங்கள் இருக்கின்றன.)

ஆனால், காயப்படுத்தப்பட்ட முஸ்லிம் தீவிரவாதிகள் இந்தியாவிற்குள் இருந்துகொண்டே (பம்பாய் குண்டு வெடிப்பு போன்ற) அழிவுகளை நிகழ்த்தலாம். இதுவொரு தீர்வற்றபோர். தசரதனின் தலைநகர் இந்தியாவிற்கு தந்தபரிசு இதுதான்.

முடிவற்ற இந்தச் சிக்கலை, அயோத்தியில் பபரி மசூதி இடிக்கப்படுவதை தவிர்த்திருந்தால் வென்றிருக்கலாம். இதனை பா.ஜ. கட்சியினரோ அதன் அங்கங்களான ஆர். எஸ் எஸ் இனரோ, வி.இ.ப வினரோ தவிர்த்திருக்கலாம். எப்போதுமே மிகமெதுவாக செயற்படுபவரும் பிரதமருமான நரசிம்மராவ் அவர்கள் நினைத்திருந்தால் தடுத்திருக்கலாம்.

முடிவு இப்படித்தான் இருக்கிறது; மசூதி இருந்த இடத்தில் சிறிய ராமர் கோவில் தோன்றிவிட்டது. இது இந்து மதவாதிகள் பலரின அடிமன விருப்பு. ஓர் இந்திரா காங்கிரஸ் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர் சொல்லியது போன்று திரு.நரசிம்மராவின் ஆழ்மன விருப்பமாக கூட இருக்கலாம்.

எது எப்படியோ, இந்தியா தனது தலையில் கொள்ளிக் கட்டையை செருகி இருக்கிறது. இந்தச் சிக்கலை தீர்ப்பதற்கு வழியைத்தேடும் வல்லமை இன்றைய இந்தியத் தலைவர்களுக்கு இல்லை. திரு. சிறிராம் மோகன் ராயும் உயிருடன் இல்லை.

## ரெலோ தேசவிரோதிகள் கிராம மக்கள் மீது தாக்குதல்

(மட்டக்களப்பு)

சிறிலங்கா இராணுவத்தினரும் ரெலோ தேசததுரோகிகளும் இணைந்து மட்டக்களப்பு மாவட்டத்தின் சில பகுதிகளைச் சுற்றி வளைத்ததுடன் அப்பகுதி மக்களில் பலரைத்தாக்கியதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

மட்டக்களப்பிலுள்ள தியாவட்டவான், மயிலன் கரச்சை ஆகிய இடங்களே சிறிலங்கா இராணுவத்தினராலும், ரெலோ துரோகிகளாலும் கடந்த செவ்வாய்க்கிழமை சுற்றி வளைக்கப்பட்டது

இப்பகுதிகளைச்சுற்றி வளைத்த இவர்கள் அங்கு வாழ்ந்து வந்த ஆண்கள். பெண்கள். சிறுவர்கள் எனப் பல தரப்பட்டோரையும்பலமாகத் தாக்கியதுடன் அவர்களுக்கு பல இன்னல்களையும் விளைவித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

## புலிகளின் தாக்குதலுக்கு ஒரு சிப்பாய் படுகாயம்

[வவுனியா]

வவுனியாவிலுள்ள நொச்சிமோட்டை சிறிலங்கா இராணுவக் காவலரண் இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலில் இராணுவ சிப்பாய் ஒருவர் காயமடைந்தார்.

நேற்று முன்தினம் காலை 7மணியளவில் நொச்சிமோட்டைக் காவலரண்களிற்கு முன்பாக வேலை செய்துகொண்டிருந்த இராணுவத்தினர் மீதே விடுதலைப புலிகள் தாக்குதலை நடாத்தினர்.

இதன்போதே வேலை செய்துகொண்டிருந்த இராணுவத்தினரில் ஒருவர் காயமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

## யாழ் - வன்னி தொடர்பு; மூன்றுஇடங்களில்செயலகம்

(யாழ்ப்பாணம்)

நெருக்கடிகால யாழ்-வன்னி தொடர்பு சேவைக்கான செயலகங்கள் மானிப்பாய் வீதியில் ஈழநாடு காரியாலயத்திற்கு அண்மையிலும் (முன்னைய காப்புறுதிக் கூட்டுத்தாபனக் கட்டடம்), கிளிநொச்சியில் கரடிப்போக்குச் சந்திக்கு அண்மையிலுள்ள கட்டடத்திலும், மேலும் தகவல் கையேற்கும் கருமபீடம் ஓமந்தை சோதனை நிலையத்திலும் இயங்கும் என தமிழீழ விடுதலைப்புலிகள் போக்குவரத்து கண்காணிப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இச் செயலகங்கள் காலை 9-00 மணி தொடக்கம் நண்பகல் 12-30 மணி வரையும், மாலை 1-30 மணி தொடக்கம் 5-00 மணிவரையும், வாரத்தின் ஏழு நாட்களும் இயங்கும்.

### இராணுவ

துச் சென்றனர். எட்டு மைல் நீளமான இந்த ஊர்வலம் கொழும்பு நகரின் பல்வேறு பிரதான வீதிகளின் ஊடாகச் சுதந்திர சதுக்கத்தை வந்தடைந்தது. முப்படையினரும் அணிவகுத்துச் செல்ல சுதந்திர சதுக்கத்திற்கு முன்பாக பிரேமதாசாவின் பூதவுடல் தாங்கிய பேழை இராணுவத்தினரால் பொறுப்பேற்கப்பட்டு பீரங்கிவண்டியில் வைத்துச் சுதந்திர சதுக்கத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது அப்போது இராணுவஹெலிகொப்டரிலிருந்து மலர்கள் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. முப்படைத் தலைவர் என்ற வகையில் இருபத்தொரு துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டு மரியாதை செலுத்தப்பட்டது.

இறுதிக்கிரியைகள் நடைபெறுவதற்கு முன்னர் அஸ்கிரிய, மல்வத்தை மற்றும் அமரபுரநிக்காயாவைச் சேர்ந்த பௌத்த மத குருமார்களின் அனுசாசன உரைகளும், சுசரித்தஇயக்கப்பொதுச்செயலாளரும், கொழும்பு மாநகர முதல் வருமான இரத்தினசிறி ராஜபக்ஷ, பங்களாதேஷ் பிரதமர் பேகம் காலிதா ஸியா, பதில் ஜனாதிபதி ஆகியோரின் இரங்கல் உரையைத் தொடர்ந்து திருமதி ஹேமாவின் நன்றி உரையும் இடம்பெற்றதை

### கண்ட

மோதிலால் நேரு எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலில் ஐ தே. கவின் கொழும்பு வேட்பாளராக போட்டியிடுகின்றார் என்பது தெரிந்ததே.

அடுத்து சிதைக்குத் தீ மூட்டப்பட்டது.

### குறைந்த அளவு மக்களே கலந்துகொண்டனர்

பிரேமதாசாவின் இறுதி ஊர்வலத்தில் மிகக்குறைந்த அளவு மக்களே கலந்துகொண்டதாக பி.பி.சி தனது நள்ளிரவுச் சேவையில் தெரிவித்தது. இதேவேளை வெரித்தாஸ் வானொலி பதினையாயிரம் மக்கள் கலந்துகொண்டதாகத் தெரிவித்தது.

வந்த பிரேமதாசா எப்போதும் கருத்துக்களை வெளிப்படையாக முன்வைப்பவர் என்றும், எந்தச் சந்தர்ப்பத்திலும் தனது கருத்துக்களை எதிர்த்தவரல்ல என்றும் முன்னாள் ஜனாதிபதி

இதேவேளை பிரேமதாசாவின் இறுதி அஞ்சலி நிகழ்வில் முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன கலந்துகொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## வெளிநாட்டோரை தடுக்க பிரான்சில் புதிய சட்டம்

பிரான்சினுள் வெளிநாட்டவர்கள் சென்று குடியேறுவதைக் கட்டுப்படுத்தும் முகமாக பல புதிய சட்டங்களை வலதுசாரி அரசு வரைந்துள்ளது. வெளிநாட்டவர்களை மணம்செய்வது சட்டவிரோதமாக குடியேறியோரை வெளியேற்றுதல், மேன்முறையீட்டு உரிமை ரத்து, உறவினர்களை அழைக்கத்தடை, அரசியல்தஞ்சம் கோரும் காரணங்களைக் கடுமையாக்கல் என்பன அவற்றுள் சிலவாகும்.

## பாதுகாப்பு அமைச்சிடம் காமினி ஆயுதம் கேட்கிறார்

லலித் கொல்லப்பட்ட சம்பவத்திற்கு பின்னர் தேர்தல் பிரசார வேலைகளை ஆரம்பிப்பதற்காக ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் சார்பில் காமினி திஸாநாயக்க பாதுகாப்பு அமைச்சிடம் ஆயுதங்களைக் கோரியுள்ளார்.

ஏப்ரல் 27-ம் திகதியன்று அவர் பாதுகாப்பு அமைச்சுக்கு எழுதியுள்ள ஒரு கடிதத்தில் ஆகக்குறைந்தது 9 எம்.எம். பிஸ்டல்களும் (தலா 25 ரவைகளுடன்) ஒவ்வொரு வேட்பாளருக்கும்ரி-56 ரக துப்பாக்கியுடன் கூடிய பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவரையும், ஆறு தொலைத்தொடர்பு சாதனங்களையும், அதற்கான மின்கலங்களையும் தந்துதவ வேண்டுமென்றும் குறிப்பிட்டுள்ளார். அத்துடன் தமது சொந்தப் பாதுகாப்பிற்காக விடுவிக்கப்படக்கூடிய ஒன்பது பொலிஸ் அதிகாரிகளின் பெயர்ப்பட்டியலையும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## அமைச்சர் தொண்டமான் இந்தியா பயணம்

(கொழும்பு)

ஜனாதிபதி பிரேமதாசா கொலையுண்ட சில மணி நேரங்களில் அமைச்சர் எஸ். தொண்டமான் அவசரமாக இந்தியா சென்றார்.

இந்தியாவுக்குப் பிரயாணம் செய்வதற்கு முன்னர் அமைச்சர் தொண்டமான் மலைநாட்டில் மேதினக்கூட்டமொன்றில் பேசினார். கூட்டம் முடிந்ததும் ஹெலிஹொப்டர் மூலம் கட்டுநாயக்கா விமான நிலையத்துக்கு வந்த அவர் அங்கிருந்து இந்தியாவுக்குப் பயணத்தை மேற்கொண்டார்.

## போரூட் பிரதிநிதி யாழ். விஜயம்

போரூட் நிறுவனத்தின் வதிவிட பிரதிநிதி இம்மாதம் 17ஆம் திகதி யாழ்ப்பாணத்திற்கு வருகைதர இருப்பதாக அறிவிக்கப்படுகிறது. வதிவிட பிரதிநிதி திரு. போல் ஹென்றி கெயின் என்பவரே வரஇருப்பதாக வானொலி தகவல் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (யோ.)

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள் 06-05-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 9305

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

27-4023, 41-7563, 42-9345, 26-2941, 26-0403
26-5113, 24-4726, 24-4560, 27-5863, 24-6972
24-3364, 24-0964, 24-4476, 22-0777, 41-4194
24-0207, 22-8754

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

26-1989, 26-5206, 26-4683, 41-8629, 28-4545
27-4301